# திருக்குறள் கதைகள்

முதற் பாரத்திற்குரியது

THIRUKKURAC
KADAIKAC

153

சு. அ. இராமசாமிப் புலவர்

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர் :: சென்னை.

காப்பிரைட்] 1948. [விலை அணா 6.

43471

M. L. P. PROJECT
Microfilmed.

# முகவுரை

திருக்குறள் கதைகள் என்னும் இப்புத்தகம் முதல் பாரத்தில் படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கத்தார் ஏற்படுத்திய ஐம்பது குறள்களுக்கும் பொருத்தமான உயர்ந்த கதைகளைக் கொண்டதாகும்.

இக் கதைகளை வரிசையாகப் படித்து முடிக்கும் மாணவர்கள் தங்கள் வகுப்பிற்கு அமைந்த ஐம்பது குறள்களையும் பொருள் தெரிந்து கற்பதோடு; அக்குறள்களையும் தம் ஆயுள் உள்ளவரையும் மறவாது பயன் படுத்துவார்கள் என்பது உறுதி.

இந்நூலை, கலாசாலைத் தலைமை ஆசிரியர்களும் தமிழ் ஆசிரியர்களும் ஆதரித்து மேலும் இப்பணியில் என்னை ஊக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.
ஆசிரியன்

# திருக்குறள் கதைகள்

## முதற் புத்தகம்

### 1. இறைவன் எப்பொருளிலும் இருப்பவன்

அம்பலவாணனும் ஆறுமுகனும் ஆருயிர் நண்பர்கள். இருவரும் ஓர் உயர் நிலைப்பள்ளியில் முதல் வகுப்பின்கண் கல்வி பயின்றுகொண்டிருந்தனர். ஒரு நாள் அம்பலவாணன் ஆறுமுகனைப் பார்த்துக், "கடவுள் எல்லாப் பொருள்களிலும் தங்கியிருக்கின்றார்" என்று சொல்வதில் எனக்கு உறுதி உண்டாக வில்லை. நீ இதனை உறுதியாக நம்புகிறாயா? ' என்று கேட்டான்.

அம்பலவாணன் கூறியதைக் கேட்ட ஆறுமுகன், ' உனக்கு ஏன் உறுதி உண்டாக வில்லை. கடவுள் ஒளிவர் இல்லாவிட்டால் இவ்வுலகம் உண்டாகியிருக்குமா? எந்த மொழியின் எழுத்துக்களையெடுத்துக் கொண்டாலும் அகரந்தான், அஃதாவது அ என்னும் எழுத்துத்தான் முதலாவதாக இருக்கிறது. அதைப் போன்றுதான் இவ்வுலகமும் கடவுளைத் தனக்கு முதலாகக் கொண்டிருக்கிறது. அகரமில்லாவிடின் எப்படி எழுத்தில்லையோ அதைப் போன்றே கடவுள் இல்லாவிடில் இவ்வுலகமும் இல்லை. தமிழ் மறையாகிய திருக்குறளைச் செய்த திருவள்ளுவதேவர் தமது திருக்குறளிலே முதலாவதாக

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு 1.

என்று கூறியிருப்பதை நீபடிக்கவில்லையா?, என்று கேட்டான்.

அகரம்— அ என்னும் எழுத்து. முதல—முதலாக வுடையன. ஆதிபகவன்— கடவுள். முதற்று— முதன்மையாகவுடையது.

## 2. அருட்செல்வரின் ஆற்றல்

ஓர் ஊரிலே ஒருபெரியவர் இருந்தார். அவர் பன்னெடுங் காலமாகப் பரமனைப் போற்றி அவனுடைய அருளைப் பெற்றிருந்தார். இறைவன் திருவருளைப் பெற்றவர்களுக்கு இவ்வுலகத்திலே அருமையான காரியம் ஒன்றும் இல்லை. அப்பெரியார் உலகத்தார் வியப்படையுமாறு அருட்செயல்கள் பலபுரிவார். அவரிடத்திலே ஓர் அழகியமான் தோல் இருந்தது. அவர் அத்தோலிலே அமர்ந்துதான் இறைவனை எண்ணிக் கொண்டிருப்பது வழக்கம்.

அப்பெரியாரிடத்திலே உள்ள பெருமையாவது; அவர் தம்முடைய மான்தோலில் அமர்ந்தபடியே எந்த இடத்தை மனதில் எண்ணுகிறாரோ அந்த இடத்தை அப்பொழுதே விண் வழியாக அடைந்து விடுவார். அப்பெரியாரை ஒரே இரவில் காசி, காஞ்சி, மதுரை, திருநெல்வேலி, திருவநந்தபுரம் முதலிய எல்லாவூர்களிலும் பார்க்கலாம். மக்கள் அப்பெரியாரை, "ஞானி" என்று மிகவும் போற்றி வழிபட்டனர். மக்கள் அப்பெரியாரைப் போற்றுவது சில

குறும்பர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள், 'இந்த ஞானி செய்வது அவ்வளவு பெரியகாரியமா? மான் தோல் மட்டும் இருந்தால் நாங்களும் பறப்போம்' என்று கூறினர்.

சிலர் அக்குறும்பர்களுக்கு ஒரு மான்தோலை விலைக்கு வாங்கிக்கொடுத்து, 'எங்கே நீங்களும் பறவுங்கள் பார்க்கலாம் என்றனர். குறும்பர்கள் நாம் இனிப்பறவாமல் இருந்தால் வாய்க்கொழுப்பாகப் பேசிய நம்முடைய பற்கள் பறந்து விடும் என்று அஞ்சியவர்களாய், மான்தோல் வாங்கிக் கொடுத்தவர்களிடம், 'நாளைக்குப் பறக்கிறோம்' என்றுகூறி அன்று இரவில்தானே காலால் போனஇடம் தெரியாமல் பறந்து விட்டார்கள்.

'பெரியவர்கள் செயற்கருஞ் செயல்களைச் செய்வார்கள்; சிறியவர்கள் அவ்வாறு செய்யார்; என்பதை மறுநாள் மான்தோல் வாங்கிக் கொடுத்தவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 2.

செயற்கரிய—செய்வதற்கு அருமையான காரியங்கள்.

---

## 3. அறத்தின் சிறப்பு

ஓர் ஊரிலே இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய தந்தை இறந்தவுடன் தந்தை வைத்துச் சென்ற பொருளை ஆளுக்குப் பாதி

யாகப் பங்கிட்டுக்கொண்டார்கள். மூத்தவன் பொருள்களை மேலும் பலவழிகளில் தேடினான். ஆனால்எவ்வகையான அறச்செயல்களிலும் செலவிட வில்லை. இளையவனோ பொருளைப் பலவழிகளிலுந் தேடியதுடன் ஏழைகளுக்கு உணவளித்தல் உடையளித்தல் முதலியவற்றிலே செலவிட்டான்.

இளையவன் செயலைக்கண்ட மூத்தவன், 'சோம்பேறிகளுக்குச் சோறுபோடுவதுடன் துணிமணிகளும் ஏன் கொடுக்கிறாய்? அவர்களுக்குக் கால் இல்லையா? கை இல்லையா? நம்மைப்போல அவர்களுந் தேடிக் கொள்ளட்டுமே; இப்பொழுது வீண்செலவிலே இவ்வாறு ஈடுபட்டால் பிற்காலத்திலே இன்பமாக வாழ முடியாது' என்று அறிவு புகட்டினான்.

முன்னோன் மொழிகளைக் கேட்ட பின்னோன், 'நீ கூறுவது நன்றாகவில்லை. அறம் என்று ஒன்று இருப்பதை நீ உணரவே இல்லை. அறத்தின்பயன் வீணாகப் போகுமா? ஒருவனுக்கு அறமானது வீடுபேற்றையும் மற்றைச் சிறப்புக்களையும் உண்டாக்கும். அத்தகைய அறத்தைக் காட்டினும் நமக்குச் சிறந்த நன்மை யாதிருக்கின்றது? ஒன்றுமே இல்லை. நீ நல்லநூல்களைப் படித்துணராத ப:டியினால்தான் உனக்குத் தெரியவில்லை' என்று மறுமொழி கூறினான்.

சிறப்புஈனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 3.

சிறப்பு—வீடுபேறுபுகழ் முதலியன. ஈனும்—கொடுக்கும். ஆக்கம்—செல்வம்; அஃதாவதுநன்மை. எவன்—யாது.

## 4. வானொலியுங் குழந்தைப்பேச்சும்.

சென்னை பட்டினத்துத் தெரு ஒன்றிலே ஒரு செல்வனும் வறியவனும் அடுத்தடுத்துக் குடியிருந்தார்கள்

செல்வனுக்குப் பிள்ளைகள் இல்லை. அவனுடைய மனைவியும் சமையலாளுந்தான் இருந்தார்கள். செல்வன் தன்னுடைய வீட்டிலே ரேடியோ என்னும் வானொலிப் பெட்டி டவத்திருந்தான். அதில் பாட்டு முதலியன வரும் பொழுது கேட்டுமகிழ்வான்.

பக்கத்து வீட்டு வறியவனிடத்திலே வானொலிப் பெட்டி இல்லை. அவனுக்குக் குழந்தைகள் இரண்டு மூன்றுபேர் இருந்தனர். தாய் தந்தையரிருவரும் அம் மக்களின் மழலை மொழிகளைக் கேட்டு மகிழ்வார்கள்.

ஒரு நாள் இரண்டு அறிஞர்கள் அந்த இரண்டு பேருடைய வீட்டிற்குஞ் சென்றார்கள். செல்வனுடைய வீட்டிற்குச் சென்றிருந்த பொழுது ஓர் இசைப்புலவருடைய புல்லாங்குழல் பாட்டு வானொலிப் பெட்டியிலிருந்து வந்து கொண்டிருந்தது. செல்வனும் அவனுடைய மனைவியும் அதைக்கேட்டுவானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பக்கத்து வீட்டிற்குச் சென்றபொழுது அவர்கள் தங்கள் மக்களோடுபேசி அவர்கள் பேசும் மழலை மொழியைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இருவர் வீட்டிற்குஞ் சென்ற அறிஞர்கள், 'திருவள்ளுவர்,' தம்மக்களுடைய மழலைச் சொற்களைக் கேட்டு மகிழாதவர்கள் குழல் ஒலி இனிது யாழ் ஒலி இனிது" என்று கூறுவார்கள்' என்று கூறியதில் எவ்

வளவு உண்மையிருக்கின்ற தென்பதை இன்று நன் குணர்ந்தோம் என்று உரையாடிக் கொண்டு சென் றனர்.

குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். 4.

குழல்—வேய்ங்குழல் முதலியன. மழலைச் சொல்-திருத்தமடையாத குழறுபடைச் சொல்.

---

## 5. மகனை முந்தி யிருக்கச் செய்த மடையன்

ஓர் அறிஞர், 'தந்தையின் கடமை' என்னும் பொருள்பற்றி ஓர் அவையிலேசொற்பொழிவுசெய்து கொண்டிருந்தார். அவர் தம்முடைய பேச்சிலே, 'ஒரு தந்தையானவன் தன்னுடைய மகனுக்குச் செய்ய வேண்டிய முதலாவது நன்மை யென்ன வெனின், பல அறிஞர்கள் கூடியுள்ள அவையின் கண்ணே அறிஞர் பலருள்ளுஞ் சிறந்தவனாகத் தன்மகன் இருக் குமாறு செய்தலேயாகும்' என்று பேசிக்கொண்டிருந் தார்.

அந்த அவையிலே ஓர் அறிவிலி இருந்தான். அவனுக்கு அறிஞர் பேசியதன் கருத்து விளங்க வில்லை. அறிவாற்றல்களாற் சிறந்து அதன் பயனாக முதலிடத்தில் அமருதல் என்பது அவனுக்குப் பிடி படவில்லை.

அவனுக்கு ஓர் எண்ணம் உண்டாகியது. அப் பொழுது அவனுடைய எட்டு வயது மகனும் அவனு டன் வந்திருந்தான். உடனே அப்பேதை தன்னுடைய

மகன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய், அங்கிருந்த இரண்டோர் அறிஞர்களுக்கு முன்னால் உட்காரும் படியாகச் செய்துவிட்டு, 'நான் என்னுடைய மகனுக்குச் செய்ய வேண்டியகடமையை இந்த ஐயா சொன்னவுடனே செய்துமுடித்துவிட்டேன் என்றான். அவன் கூறியதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து நகைத்தனர்.

அறிவிலியோ அவர்கள் எதற்காக நகைக்கிறார்கள் என்பதை யறியாதவனாய், நாம் நம்முடைய கடமையைச் செய்து விட்டதற்காக எல்லோரும் மகிழ்ச்சியடைகிறார்கள் என்று எண்ணிக் கொண்டான்.

*தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து*
*முந்தி இருப்பச் செயல்.* — 5.

*ஆற்றும் நன்றி—செய்யும் நன்மை. அவையத்து—அறிஞர்கள் கூட்டத்தில். முந்தி-முன்னே, செயல்—செய்தல்.*

## 6. நற்குணம் பிள்ளையின் நல்லியல்பு

சேலத்திலே பாலப்ப பிள்ளை என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய மகனை நல்லவனாக வளர்க்கவேண்டு மென்று எண்ணினார். அவனுக்கு 'நற்குணம்' என்று பெயரிட்டார். நற்குணனும் தன்னுடைய பெயருக் கேற்பத் துர்க்குணம் யாதும் அற்றவனாக வளர்ந்தான்.

பாலப்ப பிள்ளை தம் புதல்வனுக்குத் தக்க அறிஞர்களைக் கொண்டு நற்கல்வி புகட்டினர். நற்குணனும் அறிவுநலத்தாலும்நல்லொழுக்கத்தாலும்சிறந்து விளங்கினன். ஏழை யெளியவர்களிடத்தில் இன்னருள் காட்டினன். பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி அவைகளைப் போக்குவான். அவனுடைய நல்லியல்பு எல்லோருடைய உள்ளத்தையுங் கவர்ந்தது.

பலரும், பிள்ளை பிறந்தால் பாலப்ப பிள்ளைக்குப் பிறந்திருக்கும் நற்குணம் பிள்ளையைப் போன்றன்றோ பிறக்க வேண்டுமென்று புகழ்ந்து கொண்டாடினர். நற்குணம் பிள்ளை, 'ஒருமகனனவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யவேண்டிய உதவி, இவனுடைய தந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவத்தைச் செய்தானே என்னும் அரியமொழியேயாகும்' என்னும் திருவள்ளுவருடைய திருக்குறளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினன்.

மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல். 6.

என்நோற்றான் கொல்— இவனைப் பெறுவதற்கு என்ன தவத்தைச் செய்தானோ?

---

## 7. அன்பு முதலியார்

ஏறக்குறைய இருநூறு யாண்டுகட்கு முன்னே மதுரையில் ஒரு முதலியார் இருந்தார். அவருடைய பிள்ளைப் பெயர் என்ன வென்பது தெரியவில்லை.

அவர் எப்பொழுது பார்த்தாலும், 'அன்பு அன்பு' என்று அன்பைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார். தம்முடைய உற்றார் உறவினர்களிடமும் மற்றவர் களிடமும் அன்பாகப்பேசி அன்பாகவே நடந்து கொள்வார்.

தம்மை யாராவது வைது அடித்தாற் கூடச் சினங்கொள்ள மாட்டார். அவர்களிடமும் அன்பா கவே நடந்துகொள்வார், அவருடைய பொருள்களை யாராவது எடுத்துக் கொண்டாலும், 'ஏன்' என்று கேட்கமாட்டார். தம்மிடம் உள்ள எப்பொருளையே னும் யாராவது விரும்புகிறார்கள் என்றுதெரிந்தால் தாமே அப்பொருளை அவர்கட்கு வலியக் கொடுத்து விடுவார்.அவருடையபோக்கைக்கண்டபலர் அவரை 'அன்புப் பித்தர்' என்று பெயரிட்டழைத்தார் கள்.

நாளடைவில் முதலியாருடைய அன்புப் பித்து அதிகரித்து வந்தது. அவருடைய போக்கைக் கண்ட அறிவாளிகள், 'அன்பே சிவம்'என்பதை இப்பெரியாரி டம் வெளிப் படையாகக் கண்டோம். நாம் நம்மு டைய பொருள்களை நமக்கே உரியதாக வைத்திருக் கிறோம். முதலியாரோ தம் உடம்பைப் பிறர் கேட் டாற் கூடக் கொடுத்துவிடுவார்போல் தெரிகிறது. 'அன்பில்லாதவர்கள் எல்லாவற்றையுந் தமக்கே உரி மையாக வைத்திருப்பார்கள் அன்புடையவர்களோ தம்முடைய என்பையும் பிறர்க்குக் கொடுப்பார்கள்' என்பது இவருடையஇடத்திலே நன்குவிளங்குகிறது என்று கூறி, அவருக்கு'அன்பு முதலியார்' என்று பெ யர் கொடுத்தார்கள்.

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 7.

உரியர்—உரிமையாகவுடையவர், என்பும்--எலும்பிலாகிய உடம்பும்.

---

## 8. விருந்தோம்பிய சிறுவன்

ஒரு சிறுவன் நோய்கண்டு படுத்த படுக்கையாக விருந்தான். மருத்துவர் வந்து அவன் நோயை ஆராய்ந்து மருந்து கொடுத்து விட்டுச்சென்றார். அவனுக்கு மருந்தைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்கள். அப்போது அச்சிறுவனுடைய உறவினர் பலர் அவனைப் பார்ப்பதற்காக வந்து அருகிலே அமர்ந்திருந்தார்கள்.

சிறுவன் தன்னிடம் கொடுக்கப்பட்ட மருந்தில் சிறிதைத் தன்னைப் பார்க்கவந்த விருந்தினர்களிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னான். சிறுவன் செய்கையைக் கண்டு விருந்தினர்கள் ஒன்றுந் தோன்றாமல் விழித்தார்கள். அவர்கள் சிறுவனை பார்த்து, 'நோய் உனக்கே தவிர எங்கட்கு இல்லையே அவ்வாறாக எங்களிடம் கொடுத்து ஏன் சாப்பிடச் சொல்லுகிறாய்?' என்று கேட்டார்கள். அதற்குச் சிறுவன்,' அஃது எனக்குத் தெரியும். தன்னை நோக்கிவந்த விருந்தினர்கள் பக்கத்திலேயிருக்கும் போது, தான்மட்டும்; இறவாமைக்குக் காரணமாகிய தேவாமுதமாக விருந்தாலும் அதனைத் தனியேயுண்ணுதல் கூடாது.

இப்போது நான் சாப்பிடப்போவது இறவாமைக்குக் காரணமாகிய மருந்தாகையால் இதனை நான்

மட்டும் சாப்பிடுதல் அறமாகாது. இவ்வாறு என்னுடைய ஆசிரியர் எனக்குப் போதித்திருக்கிறார். ஆகையால் முன்னே நீங்கள் சிறிது உண்ணுங்கள்' என்றான்.

விருந்தினர் அச்சிறுவனுடைய மொழிகளைக் கேட்டுப், பையன் பெரியவனானால் நன்றாகவிருந்தோம்புவா னென்று மகிழ்ந்தார்கள்.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று.** 8.

விருந்து—புதிதாக வந்தவர்கள். புறம்—பக்கம். சாவாமருந்து—அமிர்தம். வேண்டல் பாற்று—விரும்பும் பகுதியை உடையது. அன்று-அல்ல.

---

## 9. இன்சொல்லே அறம்

முன் காலத்திலே ஒரு பழந்தமிழ் வீரன் போர்க்களத்திற்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது வழியிலே ஒரு பெரியவர் எதிர்ப் பட்டார். அவர் போர்க்களஞ் செல்லும் வீரனைப்பார்த்து அறத்தின் பெருமையை விரித்துரைத்தார். 'நீ அறத்தினை எப்பொழுதுஞ் செய்தல் வேண்டும்' என்று கட்டளையிட்டார்.

போர்க்களம் போகும் வீரன் பெரியவரைப் பார்த்து, 'ஐயா! பெரியவரே நான் இப்போது தான் வீடு வாசல் பொருள் முதலியவைகளை விட்டு விட்டுப் போர் புரிவதற்காகப் போர்க்களம் போகிறேன்,. நீங்கள் இப்பொழுது அறஞ்செய்யச் சொல்லுகிறீர்கள்.

கையில் பொருளும் தக்கவிடமும் இல்லாமல் எவ்வாறு அறஞ்செய்வது?' என்று கேட்டான்.

அதற்குப் பெரியவர், 'ஓ வீர! அறம் என்ருல் ஒருவருக்குப் பொருள் கொடுப்பது மட்டுந்தான் என்று நீ எண்ணிக் கொண்டிருக்கிருய் போல் இருக்கிறது. இது தவறு. அறமாவது எல்லோரையும் மிகுந்த விருப்பதுடன் பார்த்து மிகுந்த அன்போடு மனம் பொருந்திய இன் சொற்களைத் தன்னையடுத்த வரிடம் இனிமையாகப் பேசுவதே அறமாகும். அதற்கு இடமும் பொருளும் ஏவலும் எதற்கு? அரிய அறமாகிய இவ்வின் சொல் பேசுவதையே நீ நல்லறமாக மேற்கொள்வாயாக' என்று உரைத்தருளினர்.

போர்க்களஞ் சென்ற வீரனும் பெரியார் புகன்றபடி, தன் கூட்டாளிகளிடத்திலும் பகைவர்களிடத்திலும் இன் சொற்பேசி அனைவருடைய நன் மதிப்பையடைந்ததுடன் அனைவருக்கும் நல்லவனும் ஆனன்.

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம். 9.

அமர்ந்து—பொருந்தி. அகத்தானும்—மனத்திலாம்.

## 10. கனியிருப்பக் காய் கவர்தல்

ஓரிடத்தில் இரு சிறுவர்கள் தம் மனம் போனவாறு ஒருவரை ஒருவர் பலவாறு இகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக் கொண்ட மொழிகள் கேட்பதற்கு மிகவும் வெறுப்பாக விருந்

தன. அப்போது அவ்வழியே சென்ற சிலர் அச்சிறுவர்கள் பேசிக்கொண்டிருத்தலைக் கவனித்தனர். ஒருவர் மற்றவரைப் பார்த்து, 'இச்சிறுவர்கள் இனியநன்மொழிகள் பேசிக்கொள்ளாமல் ஏன் இவ்வாறு ஒருவரையொருவர் கடுமொழிகளால் தாக்கி இகழ்ந்து கொள்ளுகின்றனர்என்றுகேட்டார்.அதற்குவேறொருவர், "எப்பொழுதும் இனிய கனிகள்தான் தின்பதற்கு மிகவும் இனிமையானவை. காய்கள் தின்பதற்கு இனிமையாக இருக்கமாட்டா, இவ்வாறாகவும் சிலர் கனியை விட்டு விட்டு நன்கு பழுக்காத காயைப் பறித்துத் தின்பதும் உண்டு. காயை விடக் கனி நன்றாக இருக்குமே என்று இவர்கள் சிறிதும் எண்ணுவதில்லை. இச்சிறுவர்களுடைய போக்கும் இவ்வாறானதுதான். நன்மொழிகள் இன்பம் விளைவிப்பன என்பதைச் சிறிதும் எண்ணமல்தான் இவ்வாறு பேசிக் கொள்ளுகிறார்கள் என்று விடையளித்தார். அதற்கு முதற்பேர் வழி 'இவ்வாறு கனி யிருப்பக்' காய் தின்னும் பேர் வழிகள் உலகில் எத்தனையோபேர் இருக்கின்றார்கள் என்றார்.

> இனிய வுளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று 10.

இனிய—இனியமொழிகள் இன்னாத—இனிமையல்லாத, கவர்ந்தற்று—கவர்ந்தாற் போன்றது.

## 11. மேன்மைக் குணமுடைய வேலன்

ஒரு செல்வன் திக்கற்ற சிறுவன் ஒருவனை வளர்த்து வந்தான். அவனைப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி பயிலச் செய்தான். அச்சிறுவனுடைய பெயர்

வேலன். வேலனோடு செல்வனுடைய மக்களும் பள்ளிக்குச் சென்று கல்வி பயின்றார்கள். ஆனால் அவர்களுடைய தலையிலே மூளைக்குப் பதிலாகக் களிமண் அமைந்திருந்தபடியால் நன்றாகப் படிப்பு வரவில்லை. வேலனோ நன்றாகப் படித்தான்.

தன் சிறுவர்கள் மக்காகவும் வேலன் அறிவுடையவனாகவும் இருப்பதைக் கண்ட செல்வனுக்குப் பொறாமை என்னும் கெட்டகுணம் உண்டாகியது. வேலனும் தன்னுடைய வளர்ப்பு மகன்தானே என்பதைக் கூட எண்ணாமல் அவனை அடித்து வைது உதைத்துப் பல வழிகளிலும் கொடுமை விளைத்தான்.

வேலனுக்கு அப்போது வயது பன்னிரண்டு. அவன் செல்வனுடைய அல்லல் பொறுக்காமல் அறச்சாலைகளில் உணவு பெற்று விடாமுயற்சியுடன் கல்வி கற்றுச் சிறந்து முடிவில் ஓர் உயர்ந்த அதிகாரமும் பெற்றான்.

செல்வனுக்கும் மற்றொருவனுக்கும் ஏற்பட்ட வழக்கொன்று வேலன்முன் வந்தது. செல்வன், வேலன் தான் அதிகாரி யென்பதையறிந்து, தான் அவன் சிறுவனாக இருக்கும்போது அவனுக்குச் செய்த கொடுமைகளை யெண்ணி வருந்தினான். தனக்குத் தோல்வி ஏற்படுமென்று உறுதி பெற எண்ணினான்.

வேலனோ அறிவாளி யாகையால் தன் தந்தையைக் கண்டதும் வணங்கினான். அவன் தனக்குச் செய்த தீமைகள் எவற்றையும் எண்ணாமல் அவன் தனக்கு உணவளித்துக் காப்பாற்றியதையே பெரிதாகக் கொண்டு மகிழ்ந்தான்,

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 11.

நன்றி—நன்மை. நன்றல்லது—நன்மையல்லாத தீமை.

---

## 12. வெற்றுரைச் சிற்றம்பலன்

திருத்தில்லை என்னும் சிதம்பரத்தின்கண் சிற்றம்பலன் என்ற பெயருடைய ஒரு சிறுவன் இருந்தான். அவன் எப்பொழுதும் குறும்பு பேசுவான்; மற்றவர்களைக் கேலிசெய்வான். வீண் மொழி பேசியே அவன் தன்னுடைய பொழுதைப் போக்குவான். அதனால் அவனுடைய பெயர், 'வெற்றுரைச் சிற்றம்பலன்' என்று நீண்டு வழங்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவ்வூருக்கு ஒரு பெரியவர் வந்தார். அவர் உண்மையிலேயே பெரியவர். மக்கள் அவரைப் பெரிதும் போற்றி வழிபாடு செய்து அவரிடமிருந்து திரு நீறு வாங்கி யணிந்துகொண்டார்கள். சிற்றம்பலன் அந்தப் பெரியவர் இருந்த இடத்திற்குச் சென்று அவரைப் பார்த்து, 'பெரியவாள் எப்பேர்ப்பட்ட மரமாக இருந்தாலும் அஞ்சாதவாள்' என்று குறும்பாகப் பேசினன்.

சிற்றம்பலன் இவ்வாறு பெரியாரைப் பார்த்து இழித்துப் பேசியதும் அங்கிருந்த ஒருவருக்கு மிகுந்த சினம் உண்டாக்கியது. அவர் எழுந்து வெற்றுரைச் சிற்றம்பலனைப் பிடித்து அவனுடைய கன்னத்திலே 'பளீர் பளீர்' என்று நான்கு அறைகள் வழங்கினர்,

சிற்றம்பலன், 'செத்தேன் செத்தேன்' என்று பிடித்தான் ஓட்டம்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 12.

யா—எவற்றை, நா—பேச்சு, சோகாப்பர்—துன்பப்படுவர். சொல்லிழுக்குப்பட்டு—சொற் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டு.

---

## 13. தீப்புண் ஆறினும் நாப்புண் ஆறுது.

திங்களூர் என்னும் ஊரிலே சங்கு என்பவனும் முத்து என்பவனும் நெருங்கிய நண்புடையவர்களாக விருந்தார்கள். அவர்களுடைய நட்புப் பதினைந் தாண்டுகள் வரை வளர்ந்து சிறந்திருந்தது. இருவருடைய நட்பையுங்கண்டு ஊரார்கள் வியப்படைந் திருந்தார்கள். அவர்களுடைய கடுமையான நட்பைக் கண்ட சிலர், 'கடுங்காற்று மழைகாட்டும்; கடுநட்பு பகைகாட்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தது உண்மையாக முடிந்து விட்டது.

தீபாவளியன்று தினம் முத்தும் சங்கும் சீனு, வெடி, சுட்டுக் கொண்டிருந்தார்கள். முத்து ஒரு வெடியைக் கொளுத்தி விளையாட்டாகச் சங்குக்குமுன்னே நீட்டினன். எதிர் பாராவிதமாகத் திடீரென்று அந்த வெடி வெடித்துச் சங்கினுடைய தோளிலே ஒரு சிறிய காயத்தை உண்டாக்கிவிட்டது. அதனற் சினமடைந்த சங்கு முத்துவைப் பார்த்து, 'மூட நாயே

உனக்கு அறிவு இருக்கிறதா? இல்லையா?' என்று கேட்டு விட்டான்.

சங்கு அவ்வாறு வைதவுடனே முத்துவினுடைய முகம் முத்துப்போல வெளுத்துப் போய்விட்டது. தான் விளையாட்டாகச் செய்தது வினையாக முடிந்ததே என்று மிகவும் வருந்தினான். தன் ஆருயிர் நண்பனாகிய சங்கு தன்னைப்பார்த்துச் சொன்னசொல் அவனுக்கு மிகுந்த வருத்தத்தை யுண்டாக்கியது. சங்கு உடனே தன் தவற்றினை நினைந்து வருந்தி முத்து இடம் தான் பேசியதைப் பொறுக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். ஆனால் முத்து முகங் கொடுத்துப் பேசவில்லை.

சங்கு அடைந்த தீப்புண் சில நாளிலே ஆறி விட்டதாயினும், முத்து அடைந்த நாப்புண் பிறகு ஒருநாளும் ஆறவேயில்லை. இறுதிவரையில் இருவரும் ஒன்று சேரவே இல்லை.

> தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
> நாவினாற் சுட்ட வடு. 13.

உள் ஆறும்—மனதிற்குள். நீங்கும் நாவினால்—இழி மொழியால், வடு—தழும்பு.

---

## 14. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது

கோடைக்காலம் ஒன்றில் ஒருநாள் ஒருபெரியவர் வழிப்பயணஞ் செய்து கொண்டிருந்தார். கதிரவன் கொடுமை மிகுதியாக விருந்தது. வழியிலுள்ள ஊர் ஒன்றில் ஒரு வீட்டுத்திண்ணையிலே சிறிது நேரந் தங்கியிருந்து புறப்பட்டார். அவ்வீடு ஒரு விலைமகளு

டையது. ஆனால் அப்பெரியவருக்கு அச்செய்தி தெரியாது.

பெரியவர் அவ்வீட்டிலிருந்து வெளிவரும்போது அவருக்கு அறிமுகமான சிலர் தற்செயலாக அவரைப் பார்த்துவிட்டனர். அவர்கள் அப்பெரியவரைப் பார்த்துப், 'பெரியீர் தாங்கள் கூடவா இந்த இழிசெயலை மேற்கொண்டிருக்கிறீர்கள் தங்கள் புகழ் மிகவுஞ் சிறந்ததாயிற்றே?' என்று கேட்டனர்.

செய்தியுணராத பெரியவர், 'எந்த இழிசெயலை மேற்கொண்டிருக்கிறேன்; நீங்கள் கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே? என்று கேட்டார். அதற்கு மற்றவர்கள், 'தாங்கள் இனி மறைப்பதிற் பயனில்லை. தாங்கள் விலைமகள் வீட்டிலிருந்து வெளிப்பட்டதை நாங்கள் தாம் நேரிற் பார்த்தோமே என்றனர். அதற்கு அப்பெரியவர், 'அது விலைமகள் வீடு என்னுஞ் செய்தியே எனக்குத் தெரியாது. வெய்யிலுக்குச் சிறிது நேரம் வீட்டில் தங்கியிருந்தேன்' என்று பதிலளித்தார். ஆயினும் பெரியவர் கூறியதை அவர்கள் நம்பவில்லை. அப்பெரியவர் களவொழுக்க முடையவரென்று அவருடைய ஊரிலும் செய்தி பரவிவிட்டது. சிறிது ஆராயாமல் இத்தகைய இழி சொல்லுக்கு ஆளானேமே என்று அப்பெரியவர் மிகுந்த வருத்தமடைந்தார். பெருமையைத் தருகிற நல்லொழுக்கத்தை மிகவும் கருத்துடன் உயிரைப்போல் பாதுகாக்க வேண்டுமென்பதை அவர் நன்றாக உணர்ந்தார்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். **14.**

விழுப்பம்—மேன்மை. ஓம்பப் படும்—பாது காக்கப் படும்.

## 15. நாமும் ஓடிய தருமர்

அரக்கன் ஒருவனுக்குக் கொண்டுசென்ற சோறு கறி முதலியவைகளை யெல்லாம் வீமன் தானே தின்றுவிட்டு மலைபோன்ற வயிற்றுடன் ஊரை நோக்கி வந்துகொண்டிருந்தான். ஊரிலுள்ள பெரியவர்கள் ஊருக்கு வெளியே வந்து காட்டு வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீமன் வருவதை அவர்கள் கண்டார்கள். ஒரு வண்டிச் சோற்றைத் தின்ற வீமன் அரக்கனைப்போலப் பருத்திருந்தபடியால் ஊர்க்காரர்களுக்கு வருவது வீமன் என்று தெரியவில்லை. அரக்கனே சினத்துடன் தங்களை நோக்கி வருவதாக எண்ணிக் கொண்டார்கள். அவர்களுக்கு மிகுந்த அச்சமுண்டாகி விட்டது.

அச்சமடைந்த அவர்கள் ஊரைப் பார்த்து ஓடலானார்கள். தருமரும் அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியவர்களைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடினார். ஓடும் பொழுது அருச்சுனன் தருமரைப் பார்த்து, 'வருகிறவன் வீமன் என்று நமக்குத்தான் நன்கு தெரிகிறதே நாமும் ஏன் ஓடவேண்டும்?' என்று கேட்டான்.

அதற்குத் தருமர் ஊரிலுள்ள பெரியவர்களெல்லாரும் ஓடும் பொழுது நாம் மட்டும் ஓடாமல் நின்று கொண்டிருக்கக்கூடாது. பெரியோர்களெல்லாரும் நடப்பதை ஒட்டித்தான் நாமும் நடத்தல் வேண்டும். இன்றேல் உலகத்தார் நம்மை "அறிவில்லாதவர்கள்" என்று வைவார்கள்' என்று கூறிக்கொண்டே மேலும் ஓடினார். பெரியோர்கள் நடப்பதை ஒட்டி நடப்

பருதான் அறிவென்பதை அன்று அருச்சுனன் தெரிந்து கொண்டான். "நாடோட நடுவோடு" ஊரோட உடனோடு" என்னும் பழமொழியும் வழங்கிவருகிறது.

உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 15.

உலகத்தோடு—அறிவாளிகளோடு, ஒட்ட ஒழுகல்—பொருந்த நடத்தல், கல்லார்—கற்காதவர்கள்.

## 16. ஒறுத்தலும் பொறுத்தலும்

ஒரு செல்வனுக்கும் வறியவனுக்கும் ஒரு முறை சிறிய காரணம் ஒன்றை முன்னிட்டு மாறுபாடு உண்டாயிற்று. செல்வன் தனக்குள்ள செல்வச் செருக்கைப் பெரிதாக எண்ணிக் கொண்டிருப்பவன். செல்வமற்ற பிறர் தன்னைப் போற்றி வழிபட வேண்டுமென்பது அவனுடைய எண்ணம். வறியவன் தன்னை ஒரு பொருட் படுத்தாமற் பேசவே அச்செல்வனுக்குச் சீற்ற முண்டாயிற்று. தன்னுடைய ஆட்கள் சிலரைக்கொண்டு அவ்வறியவனை நன்கு புடைத்து விட்டான்.

செல்வனுக்கு, வறியவனைப் புடைத்துத் தன் பெருமையை நிலை நிறுத்திக் கொண்டதாக மிகவும் மகிழ்ச்சி. அவ்வறியவனைப் புடைத்தது ஊரினருக்குப் பிடிக்கவில்லை. செல்வக் கொழுப்பால் வறியவர்களை வருத்தலாமா? அறிவற்ற அவனுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்று முடிவுசெய்தனர்.

அச் செல்வனிடம் யாருஞ் சென்று வேலைபார்க்காதவாறு தடுத்து விட்டதுடன் தாங்களும் அச் செல்

வனிடத்திலே நன்கு பேசாமலும் ஒரு பொருட்படுத் தாமலும் ஒதுங்கிவிட்டனர். அச் செல்வனுடைய கொட்டத்தை யடக்காவிட்டால் அவனுக்குத் தலைக் கிறுக்குஏற்பட்டு எல்லோரையும் தொல்லைசெய்வான் என்றே அவர்கள் அவ்வாறு செய்தனர்.

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். **16**

ஒறுத்தார்க்கு—தண்டித்தவர்க்கு, பொன்றுந் துணையும்—இறக்கும் வரையும்.

---

## 17. பொறாமையும் வறுமையும்

குப்பனும் சுப்பனும் அண்டை வீட்டுக்காரர்கள். குப்பன் நல்ல மனமுடையவன் அல்லன். அவனிடம் உள்ள கெட்ட தன்மை என்னவெனின்; பிறருடைய நல் வாழ்வு செல்வம் முதலியவைகளைக் கண்டு மகிழ்ந்து பொறுக்கமாட்டான். அவனுக்கு ஆடு, மாடு கள், வீடு வாசல்கள், நில புலங்கள் முதலியன வேண் டிய அளவு இருந்தன. ஆனால் பிறருக்கு அவ்வாறு இருக்கக்கூடாது என்பது அவனுடைய எண்ணம்.

சுப்பனோ குப்பனுக்கு முற்றிலும் மாறுபட்ட தன்மையுடையவன். பிறருடைய நல்வாழ்வையே தன்னுடையதாக எண்ணி மகிழ்வான். அவனுக்கும் குப்பனுக்குள்ள அளவு செல்வம் இருந்தது. ஆனால் அஃது அவனுடைய நல்லெண்ணத்தால் நாடோறும் பெருகி வந்தது.

சுப்பனுடைய செல்வம் பெருகி வருவதைக் கண்டு குப்பன் மிகுந்த பொறாமைப் பட்டு வருந்தி

ஞன். அதனுடைய பயன் என்ன தெரியுமா? வருந்திய குப்பனுடைய செல்வம் நாடோறும் குறைந்து கொண்டு வந்ததுதான். நாளடைவில் சுப்பன் பெரிய செல்வனுகி விட்டான். குப்பனே வறியவனுகி விட்டான். சுப்பன் குப்பனுடைய நிலைமையைக் கண்டு வருந்தி அடிக்கடி உதவி புரிந்துகொண்டிருந்தான். குப்பனே சுப்பனுடைய பெருஞ் செல்வத்தைக்கண்டு பொறாமைத் தீயால் நன்கு சுட்டுப் பொசுக்கப்பட்டு இறுதியில் அங்குதங்கியிருக்கவே மனங் கொள்ளாமல் ஊரை விட்டு ஓடியே போய் விட்டான்.

அழுக்கற்(று) அகன்றாரும் இல்லை அஃ தில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். 17

அழுக்கற்று—பொறாமைப் பட்டு. அகன்றாரும்—பெருஞ் செல்வராயினரும். அஃ தில்லார்—பொறாமைப் படுதல் இல்லாதவர். பெருக்கம்—செல்வம்.

---

## 18. கோளுக்காரக் குண்டுணி பெருமாள்

ஒரு பள்ளிக்கூடத்தில் பெருமாள் என்று பெயருடைய சிறுவன் படித்துக் கொண்டிருந்தான். அவன் பொதுவாக நல்லவனே. அவனிடம் ஒரு கெட்ட பழக்கம் என்னவென்றால்; மற்றைச் சிறுவர்களைக் காணுத போது ஒருவனைப் பற்றி மற்றொருவனிடம் இல்லாததும் பொல்லாததும் கூறி அவர்களுக்குள் மாறுபாட்டை உண்டாக்கிவிடுவான். அதனுல் அவனுடைய பெயர், 'கோளுக்காரக் குண்டுணிபெருமாள்' என்று நீண்டு விட்டது.

சிறுவர்கள் செய்யும் சிறிய தவறுகளையும் பெரிதாக்கி ஆசிரியர்களிடமும் மற்றவர்களிடமும்

சொல்லிக்கொண்டிருப்பது நாளடைவில் அவனுடைய முழுநேர வேலையாகிவிட்டது. பெருமாளுடைய புறங் கூற்றால் குற்றமற்ற பையன்கள் கூடத் தண்டனை பெறும்படியாக நேர்ந்தது. குற்ற மற்ற சிறுவர்கள் தாங்கள் தண்டிக்கப் பெற்றால் தாங்கள் குற்ற மற்றவர்களென்பதை விளக்கிக் காட்டிய பிறகுதான் தண்டித்தவர்களுக்கு உண்மை தெரியும். இத்தகைய செயலால் நாளடைவில் எல்லோரும் குண்டுமணி பெருமாளை அடியோடு வெறுத்தார்கள்.

பள்ளிக்கூட அதிகாரிகள் பெருமாளைப் பள்ளிக்கூடத்தில் நின்றும் விலக்கிவிட்டார்கள். பெருமாளுக்குப் புறங்கூறுவதற்கு இடமே அகப்படவில்லை. மிகவும் இழிவடைந்த பெருமாள் பரீட்சையில் தேறாத மாணவர்கள் சிலர் தற்கொலை செய்து கொண்டு இறந்து விடுதலைப் போலத் தானுஞ் செய்யலாமா என்று எண்ணினான். தன் எண்ணத்தைத் தன் ஒரே நண்பனான திருவேங்கடத்திடமும் கூறினான். அதற்குத் திருவேங்கடன், 'உன்போன்றவர்கள் இறந்து தொலைவதுதான் உனக்கும் பிறருக்கும் நல்லது' என்று தன் எண்ணத்தைக் கூறினான். புறங்கூறுதல் எங்கே போய் முடிந்தது பார்த்தீர்களா?

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலில் சாதல்
அறங் கூறும் ஆக்கம் தரும். **18.**

புறங்கூறல்— காணாவிடத்துக் குற்றங்கூறுதல். அறங் கூறும்—அறநூல் சொல்லும். ஆக்கம்— மேன்மை.

## 19. மௌன குரு நாத அடிகள்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஞான நூல்களையெல்லாம் நன்கு கற்றுத் தெளிந்த வர். அவர் எப்பொழுதும் இறைவன் எண்ணிய படி இனிதமர்ந்திருப்பார். வாய் திறந்து ஒரு மொழி கூடப்பேச மாட்டார். யாராவது ஏதேனும் பேசி ளுல் அதற்கு அவர் தம்முடைய பதிலை எழுதிக்காட் டுவார்.

ஒரு நாள் சிலர் அவரைப் பார்த்துத், 'தாங்கள் ஏன் பேசுவதில்லை? பேசாமலிருந்தால் ஞானம் வந்து விடுமா? வீடு பேறுகிடைக்குமா? பேசாமலிருக்கிற ஊமைகள் அனைவரும் வீடு பேற்றையா அடைகிருர் கள்?' என்று கேட்டார்கள்.

அதற்கு மௌனகுருநாதஅடிகள், 'பேசாமலிருப் பதால் மட்டும் எத்தகைய பயனும் உண்டாகாது, பேசினுல் பயனுடைய மொழிகளைப் பேசுதல் வேண் டும். பயனில்லாத சொற்களை ஒருபோதும் பேசுதல் கூடாது.எப்போதும் பேசுவதால் நாளடைவில் வீண் பேச்சும் பொருளற்ற பேச்சும் அதிகரிக்கும். அதனை யெண்ணியே நான் பேசாமலிருக்கிறேனே தவிர வேறொன்றும் அன்று' என்று எழுதிக் காட்டினுர்.

அவரிடம் கேள்வி கேட்டவர்கள், பேசாமல் மௌனமாக இருப்பது எதற்கு என்பதை உணர்ந்து கொண்டவர்களாய் அவ்வடிகள் கூறிய பதில் மிக வும் நேர்மையான தென்பதை அறிந்து கொண்டார் கள். அது முதல் அப்பெரியாருடைய பெருமை மேலும் அதிகப்பட்டது.

சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் 19.

பயனுடைய—பயனுடைய மொழிகளை. பயனிலாச்சொல்—பொருளற்றசொல்.

---

## 20. புலவர் கள்ளருக்குப் புகன்றது

ஒரு புலவர் மலைநாட்டு மன்னன் ஒருவனைக் கண்டு பரிசில் பெறுவதற்காக ஒரு காட்டின் வழியே சென்றுகொண்டிருந்தார். அவர் பலநாட்கள் உண்ணாதிருந்தமையின் மிகவுங் களைத்துத் தளர்ந்திருந்தார். அக்காட்டின் வழியே அப்போது கள்ளர்கள் பலர் புலவருக்கு முன்பாகவந்து தோன்றினர். அவர்களைக் கண்ட புலவர் அஞ்சி நடுங்கினர். 'தாம் ஒரு புலவரென்றும் தம்மை ஒன்றுங் கொடுமைப்படுத்தாது விட்டுவிட வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

கள்ளர்கள் புலவர் நிலைமையை உணர்ந்து வருந்தினர். புலவரைப்பார்த்து, 'நீர் சோம்பேறியாக இருப்பதால் தான் இவ்வாறு பட்டினிகிடந்து பசியால் வாடி வதங்கவேண்டியதாக விருக்கிறது. நீர் ஒன்றும் எண்ணாமல் எங்களோடு சேர்ந்துவிடும். மிகுவிரைவில் நல்ல செல்வமடைந்து இனிமையாக வாழலாம்' என்று புலவருக்கு அறிவுரை கூறினர்.

கள்ளர்கள் கூறியதைக் கேட்டபுலவர், 'நான்பசியால் வாடி வருந்தி இறந்து தொலைந்தாலும் தொலைவேனே தவிர; நீங்கள் கூறுகிறபடி நானும் களவுத் தொழிலில் இறங்கிவிடமாட்டேன். களவுத்தொழிலானது மிகவுந் தீயது. தீயகாரியம் தீமையைக் கொ

டுக்குமாகையால் தீயகாரியத்தைச் செய்வதற்குத் தீயைத் தொடுவதற்கு அஞ்சுவதுபோல அஞ்சவேண்டும். நீங்கள் களவுத் தொழிலைவிட்டு விட்டு நல்வழியிலே நடவுங்கள்' என்று கூறினர்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும். 20.

தீயவை—தீயசெயல்கள். தீய—கெட்டவை பயத்தலால்—கொடுத்தலால்.

---

## 21. அறம் புரிந்த அழகப்பர்

செட்டிமார் நாட்டிலே ஓர் ஊரில், அழகப்ப செட்டியார் என்று பெயருடைய ஒரு செட்டியார் இருந்தார். அவர் பொருளீட்டுவதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து பெரும் பொருள் திரட்டினர். அவருடைய செல்வம் ஒன்று பத்தாகப் பெருகியது. அவர் ஒரு குட்டிக் குபேரனக விளங்கினர்.

தாம் அரும்பாடுபட்டுத்தேடிய பொருளினை அழகப்பர் பல வகையான நல்லறங்களினுஞ் செல விட்டார். செட்டியாருடைய மட்டில்லாத அறம் எட்டுத்திக்குகளினும் எட்டியது. பல புலவர்கள் செட்டியாருடைய அறச் செயல்களைப் புகழ்ந்து பாடிக்கொண்டு சென்றூர்கள். அவர்களுக்கெல்லாஞ் செட்டியார் தகுந்த பரிசளித்துப் போற்றினர். தக்கார்களைக் கண்டால் அவர்களுக்குத் தக்க பொருளளிப்பதற்குச் செட்டியார் தயங்காமல், பார்த்தவர்கள் செட்டியாரைப் பாரி என்றும் கன்னன் என்றும் புகழும்படியாக அள்ளி வீசுவார்.

செட்டியாருடைய பெருங்கொடை அவருடைய கணக்கப் பிள்ளைகளில் தலைமைக் கணக்கப்பிள்ளைக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'இப்படிப் பொருளை வாரி வீசினால் விரைவில் செல்வம் கரைந்துபோகும். ஆகையினால் பெருங்கொடைகளைத் தடை செய்ய வேண்டு' மென்று எண்ணியவராய்த் தம்முடைய கருத்தைச் செட்டியாருக்குக் கூறினார்.

கணக்கப்பிள்ளை கழறியதைக் கேட்ட செட்டியார், முயற்சி செய்து தேடியபொருளெல்லாம் நல்லவர்களுக்கு உதவி செய்தற் பொருட்டுத்தான். ஆகையால் நீர் பேசாமல் இரும். உமக்கொன்றுந்தெரியாது' என்று பதில் கூறினார்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 21

தாள் ஆற்றி—முயற்சி செய்து. தந்த—தேடிய. தக்கார்—தகுந்தவர். வேளாண்மை—உதவி.

---

## 22. புகழை விரும்பிய பொன்னப்பன்

ஓர் ஊரில் பொன்னப்பன் என்று பெயரையுடைய ஒருவன் இருந்தான். அவன் சிலஅறிஞர்களிடம் பழகிய படியால் சிறிது அறிவுடையவனாக விருந்தான்· தன்னைப்புகழ்ந்து பேசக் கூடியவர்களைக் கண்டால் அவனுக்கு மிகவும் விருப்பம். தன்கையில் அகப்பட்டதை யாரேனும் புலவர்களைக் கண்டால் அவர்களிடம் கொடுத்துத் தன்மீது ஒரு பாட்டுப்பாட வேண்டும். என்று கேட்டுக் கொள்வான்.

ஒரு நாள் அவன் ஓரிடத்தில் நான்கணுவைக் கூலிவேலை செய்து தேடினுன், அவன் அந்த நான் கணுவோடு வீட்டை நோக்கி வந்துகொண்டிருந் தான். வழியிலே ஒரு புலவர் எதிர்ப்பட்டார். பொன் னப்பன் நான்கணுவையும் அப்புலவரிடம் கொடுத்து, ஒரு பாட்டுத் தன்மீது பாடவேண்டுமென்று வேண் டிக் கொண்டான்.

அப்புலவர் அந்நான்கணுவையும் வாங்கிக் கொண்டு, நின்றுகூடப் பாடாமல் போகிற போக்கி லேயே;

"என்னப்பன் எல்லோர்க்கும் நல்லப்பன் (எத்துபுகழ்ப்
பொன்னப்பன் என்றே புகல்." 22.

என்று ஒரு குறள் வெண்பாவைப் பாடிக் கொண்டு சென்றுர். அதனைக்கேட்ட பொன்னப்பன் மிகுந்த மகிழ்ச்சிடைந்தான்.

தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதில்லார்
தோன்றலில் தோன்றுமை நன்று.

தோன்றில்—மக்களாய்ப் பிறந்தால். அஃது-அப் புகழ்.

---

## 23. வேலனும் பாலனும்

வேலனும் பாலனும் முதல் வகுப்பிலே படித்துக் கொண்டிருந்தார்கள். வேலன் மிகவும் முரடன். உடற் பலமும் நன்கு அமைந்தவன். பாலனே வேலனைவிட வயதினும் பலத்தினும் குறைந்தவன்.

ஒருநாள் வேலனுக்கும் பாலனுக்கும் வகுப்பில் சிறிது பகையுண்டாயிற்று. வீட்டிற்குப் போகும் வழி

யில் பாலனை நன்கு அடிக்கவேண்டுமென்று வேலன் முடிவுசெய்து கொண்டிருந்தான்.

பள்ளிக்கூடம் கலைந்தது. பாலன் முன்னுற் சென்று கொண்டிருந்தான். வேலன் அவனைப்பிடித்து அடிப்பதற்காக விரைந்து சென்றான். அதே பள்ளிக் கூடத்தில் மூன்றும் வகுப்பில் முத்து என்னும் ஒரு பையன் இருந்தான். அவன் வயதிலும், பலத்திலும் வேலனைவிட அதிகமானவன். அவனுக்கும் வேலனுக் கும் பகையுண்டு, முத்துவைக் கண்டால் வேலனுக்கு உடல் நடுக்கம் எடுத்துவிடும். பிடித்து உதைத்தால் என்ன செய்வதென்று அஞ்சி வேறுவழியாக ஓட்டம் பிடிப்பான்.

வேலன் பாலனை அடிக்கச் சென்றபொழுது முத் துவை நினைத்துக் கொண்டான். பாலன் நம்மிலும் சிறியவன் நமக்கு அஞ்சித்தான் விரைவாக நடக்கி றான். நாம் முத்துவைக் கண்டு அஞ்சி நடுங்குவது போலப் பாலன் நம்மைக்கண்டு அஞ்சுகிறான். நாம் ஒருவனுக்கு அஞ்சிக் கிடக்கும் பொழுது நாம் ஏன் இன்னொருவனை அஞ்சச் செய்யவேண்டும் என்னும் எண்ணம் அவன் உள்ளத்தில் உண்டாயிற்று. அதன் பிறகு வேலன் தனக்கு யார்மேலாவது மற்றைச் சிறு வர்களிடத்தில் சினம்வந்து அவர்களை அடிக்கச் சென் றால் அப்பொழுது முத்துவை நினைத்துத் தன்சினத் தை மாற்றிக்கொள்வான்.

வலியார்முன் தன்னை நினைக்க; தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து 23

தன்னை நினைக்க—தன் அச்சத்தை நினைக்க; செல் லும் இடத்து—செல்லும் பொழுது.

## 24. களவு நினைத்த கறுப்பன்

கறுப்பன் என்னும் பெயருடைய சிறுவன் ஒருவன் ஒரு மாந்தோப்பைச் சுற்றித்திரிந்து கொண்டிருந்தான். தோட்டக்காவலாள் ஏமாந்த சமயம் பார்த்துச் சிலமாங்கனிகளைத் தட்டிக் கொண்டு போய்விட வேண்டுமென்பது அவனுடைய எண்ணம். வேளையும் மாலைவேளை. பகலவன் மறையுஞ் சமயம். திடீரென்று கறுப்பன் காலில் சுறுக்கென்றது. முள்ளாக இருக்கலாமென்று கீழே குனிந்து பார்த்தான் அவன் கீழே குனிவதற்கு முன் வலிமேலே ஏறிவிட்டது. கீழே முள்ளுக்குப் பதிலாகக் கருந்தேள் ஒன்று நகர்ந்து கொண்டிருந்தது.

கறுப்பன் வலி பொறுக்க முடியாமல்கதறினான். வீட்டைநோக்கி ஓடினான். ஓடும்போதே கூத்தாடியைப் போலக் கூத்தும் ஆடினான். பலபேர் கூடிவிட்டார்கள். என்ன எங்கே? என்று பல கேள்விகளை அடுக்கினார்கள். கறுப்பன் மாஞ்சோலையில் தேள் கொட்டியதைக் கூறினான். 'நீ ஏன் இந்நேரத்திற்கு அங்கே சென்றாய்,' என்று கேட்டார் ஒரு பெரியவர். கறுப்பன் தான் சென்ற நோக்கத்தை மறைக்காமல் வெளியிட்டான். நீ களவு செய்ய எண்ணியதனால் தான் இவ்வாறு தண்டிக்கப்பட்டாய்' என்றார் பெரியவர். 'களவு செய்ய நினைத்ததுகூடவா தவறு; அதற்காகவா இவ்வளவு பெரிய தண்டனை?' என்றான் கறுப்பன்.

**உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல் 24**

உள்ளத்தால்—மனத்தால். உள்ளலும்—நினைத்தலும். கள்வேம்—கைப்பற்றிக்கொள்வோம். எனல்—று கருதுதல்.

## 25. மெய்யப்பனான வேங்கடாசலன்

ஓர் உயர் நிலைப்பள்ளியிலே, வேங்கடாசலன் என்னும் பெயருடைய ஒரு சிறுவன் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அகவை பன்னிரண்டு. அவன் தன்னுடைய தாய்தந்தையர் கட்டளைப்படி உண்மை பேசுவதைக் கடைப்பிடித்துஒழுகிவந்தான். எத்தகைய நிலைமையிலும் பொய்பேசுவதே இல்லை யென்பது அவனுடைய முடிபு.

அவனுடைய கொள்கை பள்ளிக்கூடத்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டியது. அனைவரும் வேங்கடாசலனுக்கு 'மெய்யப்பன்' என்று வேறொரு பெயர் இட்டு அவனை அப் பெயராலேயே அழைத்தார்கள்.

ஒருநாள் ஒரு பையன் ஆசிரியரைப் பார்த்து, 'பொய் சொல்லாமல் இருப்பது பெரியகாரியமா? எத் தனையோ பையன்கள் பொய்சொல்லாமல் மெய் பேசுபவர்களாக இருக்கிறார்கள் அவ்வாறாக வேங் கடாசலனிடம் மட்டும் என்ன சிறப்பு இருக்கிறது அவனை மட்டும் மிகுதியாக நாம் புகழ்கிறோமே' என்று கேட்டான்.

அதற்கு ஆசிரியர், 'மெய் பேசுகிறவன் முகத் தைப் பார்த்தால் உண்மை தெரியும். எல்லோரும் அவனைப் போற்றக் காரணம் அவனுடைய மெய்ம் மைக்குணந்தான். எவன் மனமார மெய்ம்மையோடு இருக்கிறானோ அவனை எல்லோரும் எளிதிலறிந்து கொண்டு தங்கள் உள்ளத்திலேவைத்துப் போற்று வார்கள். நீ கூறுகிறபடி மெய்ம்மையை மட்டும் பேசும் வேறுசத்திய அரிச்சந்திரர்கள் இருந்தால்

அந்த அரிச்சந்திரனை ஏன் எல்லோரும் தெரிந்து கொள்ளவில்லை? திருவள்ளுவர், "மனமார மெய் பேசுபவன் பெரியோர்களுடைய உள்ளத்திலெல்லாம் இருப்பான்" என்று கூறியிருக்கிறாரே அஃது உனக்குத்தெரியாதா?' என்று கேட்டார். மாணவன் பதிலளிக்க முடியாமல் விழித்தான்.

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

உள்ளத்தால்--மனத்தால். பொய்யாது--பொய்மைத்தன்மை உண்டாகாமல். உளன்--இருப்பான்.

## 26. சினமடையாத சின்னப்பன்

சென்னையிலே சின்னப்பன் என்று பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் அடிக்கடி திருவொற்றியூர் சென்று அங்கு எழுந்தருளியுள்ள ஒரு பெரியவரைக் கண்டு வணங்கித் தனக்கு அருள்மொழி கூறியருள வேண்டுமென்று வேண்டுவான். அப்பெரியவர் அவ்வாறே செய்வதாகக் கூறியருளியதுடன் அவனைப் பார்த்து, 'உனக்குச் சினம் வருமா? நான் சினமுடையவர்களுக்கு அருண்மொழிவழங்குவதில்லை' என்பார். சின்னப்பன் தனக்குச் சினமேவராதென்றும். தான் பொறுமையே வடிவாக வந்து பிறந்தவனென்றும் பெரியாரிடம் கூறிக்கொண்டு வந்தான்.

பெரியாரிடம் சின்னப்பன் செல்வதும் வழக்கப்படி அவர் கேட்பதும் நெடுங்காலமாக நிகழ்ந்து வந்தன. சின்னப்பன் ஒருவாறு பொறுமையுடையவனாகவே இருக்கிறான் அவனுக்கு அருண்மொழி வழங்

கலாமென்று பெரியவர் முடிவுசெய்திருந்தார். பெரியார் முடிவையறிந்த சின்னப்பன் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருந்தான்.

இறுதியில் சின்னப்பன் அருளுரை பெறும் நாள் வந்தது. அன்றும் பெரியவர் தமது வழக்கப்படி சின்னப்பனைப் பார்த்து, 'உனக்குச் சினம் வருமா? வராதா? என்பதை இன்று கடைசிமுறையாகக் கூறிவிடு' என்றார். அருளுரை பெறப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் தன்னை மறந்திருந்த சின்னப்பன், 'ஓ பெரியவரே என்ன அறிவில்லாதவராக இருக்கிறீர்? எனக்கு சினம் வராதென்று உமக்கு எத்தனை நாளைக்கு இழ வெடுப்பது. இன்றுகடைசி முறையாகக் கூறிவிடுகிறேன் தெரிந்து கொள்ளும் எனக்குச் சினமே வராது. இஃது உறுதி; முக்காலும் உறுதி என்று மிகுந்த சினத்துடன் பேசினான். பெரியவர் நகைத்தார். பிறகுதான் சின்னப்பனுக்கு அவனுடைய தவறுதல் தெரிந்தது.

> **நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
> **பகையும் உளவோ பிற.** **26**

நகை—மகிழ்ச்சி. உவகை—களிப்பு. சினம்—தனக்கு வெறுப்பன செய்தார் மாட்டு உண்டாகும் உள்ளக் கொதிப்பு.

---

## 27. புதுத் தண்டனை

இராமண்ணுவும் சுப்பண்ணுவும், அண்டைவீட்டுக் காரர்கள். அண்டைவீட்டுக் காரர்கள் என்றால் தான் சண்டையைப்பற்றிக் கேட்கவேண்டியது

இல்லையே. இராமண்ணுவும் சுப்பண்ணுவும் எப்பொழுதுபார்த்தாலும் நாயும் பூனையும் போலச் சண்டை போடுவார்கள்.

சுப்பண்ணு முரடனுகையால் இராமண்ணுவைச் சமயத்தில் அடித்தும் விடுவான். அடிபட்ட இராமண்ணு சும்மா இருக்கமாட்டான். தகுந்த துணை சேர்த்துக்கொண்டு சமயம் பார்த்துச் சுப்பண்ணுவை வெளுத்து விடுவான். இத்தகைய நிகழ்ச்சி நெடுங் காலமாக நடந்துகொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் அடக்கமுடியவில்லை.

வழக்கம் போல் ஒருமுறை சண்டைநேர்ந்தது சுப்பண்ணு இராமண்ணுவை நன்கு அடித்துவிட்டான். வழக்கம் போல் இராமண்ணு திருப்பியடிக்க ஏற்பாடு செய்தான். திடீரென்று ஒருநாள் இரவு பன்னிரண்டு கள்ளர்கள் சுப்பண்ணுவின் வீட்டில் நுழைந்து சுப்பண்ணுவைப் பிடித்துத் தூணோடு கட்டிவைத்து நன்கு புடைத்தார்கள். பொருள்கள் இருப்பதைக்காட்டுமாறு தொல்லைசெய்தார்கள். செய்தி இராமண்ணுவுக்குத் தெரிந்தது. எப்படியும் அண்டை வீட்டுக்காரனல்லவா? சுப்பண்ணுவைப் புடைப்பதற்கு ஏற்பாடு செய்திருந்த ஆட்களை அழைத்துக் கொண்டு சுப்பண்ணுவின் வீட்டிற்கு ஓடினுன். இராமண்ணுவைக்கண்ட சுப்பண்ணு அந்தோ அந்தப்பகைவனும் இதுதான் சமயமென்று நம்மை யடிப்பதற்கு வந்துவிட்டான். இனி நம்முடைய கதி அதோகதி தான் என்று வருந்தினுன்.

ஆனுல் நடந்தது சுப்பண்ணு நினைத்ததற்கு மாருக நடந்தது. இராமண்ணு தன் ஆட்களைக் கொண்டு

கள்ளர்களை அடித்து விரட்டியதுடன் சுப்பண்ணு கட்டுக்களையும் அவிழ்த்து அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான்.

இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 27

இன்னு—இனிமையல்லாதவை. ஒறுத்தல்—தண்டித்தல். நன்னயம்—நல்லகாரியங்கள்.

## 28. கோபாலனும் பாம்பும்

கோபாலன் என்பவனுடைய வீட்டிலே ஒரு நல்லபாம்பு குடியேறியது. சிலர் அப்பாம்பினை அடித்துக் கொன்றுவிடும்படியும் இன்றேல் அப்பாம்பால் ஆபத்து ஏற்படுமென்றும் வற்புறுத்திக் கூறினார்கள்.

கோபாலன் அவர்கள் கூறியதைக் கேட்கவில்லை. இயல்பாகவே கோபாலன் இரக்கமுடையவன். ஆகவே அவன் அவர்களைப் பார்த்து, 'அப்பாம்பு என்னையோ என் பிள்ளை குட்டிகளையோ கடித்துக் கொன்றாலும் கொல்லட்டும் நான் அந்த நல்லபாம்பினை அடித்துக்கொல்ல மாட்டேன். அது நல்ல பாம்பாகையால் அஃது எங்களை ஒன்றுஞ் செய்யாதென்று கூறி விட்டான்.

நாளடைவில் அப்பாம்பு குட்டிகளையும் உண்டாக்கிற்று. அக்குட்டிகள் சில சமயங்களில் வீடு முழுவதும் ஊருவதும் உண்டு. அப்பொழுது கோபாலனுடைய குழந்தைகள் அப்பாம்புக் குட்டிகளைத் தெரியாமல் மிதித்து விடுவதும் உண்டு. ஆனால் அப்

பாம்புக்குட்டிகளோ பாம்போ கோபாலனுக்கு எத்த கைய தீங்கையும் செய்யவில்லை.

கோபாலன் பாம்போடு பாம்பாக வாழ்ந்து வரு தலைக் கண்ட சிலர், கோபாலன் பாம்புகளைத் தன் வழிப்படுத்தும் மந்திரம் தெரிந்தவன் என்று எண்ணிக் கொண்டு தங்களுக்கும் அந்த மந்திரத்தைச் சொல் லித்தரவேண்டுமென்று தொல்லை செய்தார்கள்.

கோபாலன் தனக்கு எத்தகைய மந்திரமும் தெரியாதென்றும் தன்னுடைய உயிர் போவதாயி னும் பிற உயிரைக் கொல்லுதல் கூடாது என்னும் உறுதியான கொள்கையினால்தான் தனக்குப் பாம்பு களால் எத்தகைய தீங்கும் உண்டாகவில்லை யென் றும் விளக்கமாக உரைத்தான்.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 28

நீப்பினும்—நீங்கநேர்ந்தாலும். செய்யற்க—செய் தல்கூடாது. நீக்கும்வினை—கொலைத்தொழில்.

---

## 29. போலித்துறவியின் பொய்க்கோலம்

ஒரு சமயம் ஓர் ஊருக்கு ஒரு துறவி வந்தார். அவருடைய சடை முழங்கால்வரை தொங்கிக் கொண்டிருந்தது. அவருடைய காவியுடை பளபள வென்று மின்னியது. அவருக்குப் பக்கத்திலே ஒரு மாணவன் திருநீற்றுப் பையுடன் இருந்தான்.

பெரியாரோ செல்வர்கட்கும் பெண்கட்கும் மட்டுந்தான் திருநீறு வழங்கித் திருவருள் வழங்கி

னரே யல்லாமல் மற்றைய அன்பர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பெரியாருடைய போக்குச் சிலருக்கு ஐயத்தை யுண்டாக்கியது. அவருடைய பெருமையை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

ஆராய்ச்சி செய்த விடத்திலே அப்பெரியாரிடம் எப்பெருமையும் இல்லையென்பதும், நல்ல தீனி யுண்ணும் பொருட்டும், கள்ளத்தனமாக இன்பந்துய்த்தற் பொருட்டுமே அவர் பொய்க்கோலம் போட்டுக் கொண்டு திரிகிறார் என்பது நன்றாகத் தெரியவந்தது. அதனை எல்லோருக்கும் தக்க ஆதாரத்துடன் விளக்கிக் காட்டினார்கள்.

உண்மையுணர்ந்த மற்றவர்கள் அப்பொய்த் துறவியை மெய்த்துறவி யென்று எண்ணி ஏமாந்தோமே. எப்பொருள் எத்தன்மையாக விருப்பினும் அதனை அப்படியே நம்பி விடாமல் அதனுடையஉண்மைத்தன்மையை ஆராய்ந்துபார்த்து உண்மையை உணர்ந்து கொள்ளுதல் தான் அறிவுடைமை என்பதைத் தெரிந்து கொள்ளாமற் போனோமே யென்று வருந்தினார்கள்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு. 29

எத்தன்மைத்து ஆயினும்—எந்த இயல்போடு கூடியிருந்தாலும். மெய்ப்பொருள்—அப்பொருளினுடைய உண்மைத் தன்மையை.

## 30. எண்ணும் எழுத்தும்

பட்டுவும் கிட்டுவும் பக்கத்து வீடுகளில்குடியிருப் பவர்கள். பட்டு நன்ருகப்படித்தவன். கிட்டுவுக்கு ஓரெழுத்துக் கூடத்தெரியாது. ஒன்றிரண்டு மூன்று களை வரிசையாக எண்ணவுந் தெரியாது.

எண்ணுமாறு சொன்ஞல், ஒன்று, நாலு, மூணு ஏழு, ஆறு, ஒன்பது, எட்டுப்,பத்து'என்றுமனம் போனபடி எண்ணுவான். படிப்பில்லாமல் போஞலும் போகட்டும் எண்ணுவதற்கு மட்டுமாயினும் கற்றுக் கொடுப்போம் என்று எண்ணியவனுய்ப் பட்டு எவ்வளவோ முயன்று பார்த்தான். ஒன்றும் வரிசையாகத் தெரியவில்லை. அவனுக்கு மூளையும் தக்கபடி அமையவில்லை. அதற்கு அவனிடம் தவறு ஒன்றும் இல்லை. மூதாதைகளிடமிருந்து வழி வழியாகவரும் தொடர்புக் குணத்திற்குக் கிட்டு என்னசெய்வான்.

ஒரு நாள் பட்டு, கிட்டுவைப்பார்த்து, 'நீ இவ்வாறு கண்ணற்றவஞக இருக்கிருயே இவ்வுலகில் எவ்வாறு காலந்தள்ளப் போகிருய்?' என்று கேட்டான். அதற்குக் கிட்டு, 'என்னைக் கண்ணற்றவனென்கிருயே நான் கண் தெரியாத குருடஞகவா இருக்கிறேன்? எனக்குத்தான் இரண்டு கண்களும் எல்லோரையும் போல நன்கு தெரிகின்றதே' என்ருன்.

கிட்டு கூறியதைக் கேட்ட பட்டு, 'நீ ஒன்றுந் தெரியாதவஞக இருக்கிருய் எண்ணென்று சொல்லப் படுவதும் எழுத்தென்று சொல்லப் படுவதும் ஆகிய இரண்டுந்தான் மக்களுக்குக் கண் என்று

சொல்லப்படுமே தவிர முகத்திலுள்ள கண் கண் என்று சொல்லப் படமாட்டா' என்றான்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 30

எண்—ஒன்றிரண்டு மூன்று முதலிய எண்கள். எழுத்து—உயிர் எழுத்து மெய்யெழுத்து முதலியன.

## 31. பட்டுவும் கிட்டுவும்

II

முன்கூறியவாறு பட்டு கூறியதைக் கேட்ட கிட்டு, 'எண்ணும் எழுத்துந்தான் கண்; முகத்திலே இருப்பது கண்கள் அல்லவென்று நீ கூறிவிட்டால் எல்லோரும் அதை ஒத்துக் கொள்வார்களா? நீ கூறுவது வேடிக்கையாக வல்லவோ இருக்கின்றது' என்று கூறினான்.

கிட்டு கூறியதைக் கேட்ட பட்டு, 'எண்ணும் எழுத்துந்தான் கண். முகத்தில் இருப்பது கண்களல்ல என்று நான் சொன்னது என்னுடைய சொந்தப் பேச்சல்ல பெரியோர்களும் அறிவாளர்களும் அவ்வாறு தான் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டிலே தோன்றிய திருவள்ளுவர் என்னும் பெரியார் தாம்பாடிய தமிழ்மறையாகிய திருக்குறளிலே, "கண்ணுடையவர் என்று சொல்லுதற்கு உரியவர்கள்; நூலைப் படித்துணர்ந்தவர்களேயாவர். கல்வி கல்லாமல் இருப்பவர்கள் முகத்தின் கண் கண்ணுடையவர்களாக இருப்பினும் அகக்கண் அற்ற

அவர்களுடைய முகக்கண்கள் புண்களேயாகு" மென்று தம்முடைய திருக்குறளிலே சொல்லி யிருக்கிருர். அதைத்தான் நான் உனக்குச் சொன்னேன். நீ கண்ணற்றவனுக முகத்திலே இரண்டு புண்களை மட்டும் பெற்றவனுக இருப்பதால் நான் சொல்வது உனக்குப் பிடிக்கவில்லை போல் தெரிகிறது. அதற்கு நான் என்ன செய்வேன்? நானுக ஒன்றுமே சொல்லவில்லையே என்ருன்.

> கண்ணுடையர் என்பவர் கற்ருேர்; முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லாதவர். 31

கண்ணுடையர்—கண்ணையுடையவர்கள். புண்ணுடையர்—புண்களையுடையவர்கள்.

---

## 32. சாமிநாதையரும் சாப்பாடும்

பழந்தமிழ் நூல்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு முதலிய சங்ககாலத்து நூல்களையெல்லாம் மிகுந்த தொல்லைப்பட்டு ஓலைச்சுவடிகள் தேடி ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டவர் சாமிநாதையர் என்னும் அறிஞராவார்.

மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை என்பவர் தாம் மேற்படி ஐயரின் தமிழாசிரியராவார். சாமிநாதையர் தாம் கல்வி பயிலுங்காலத்திலே எப்பொழுது பார்த்தாலும் ஏதாவதொருநூலைப் பாடங்கேட்டுக் கொண்டேயிருப்பார். சாப்பாட்டைக்கூட அவர் ஒரு பொருட்படுத்தமாட்டார். பாடம்படிப்பதிலேயே

அவர்மனம் எப்பொழுதும் அழுந்தி யிருக்கும். ஆசிரியராகிய மீனாட்சி சுந்திரம்பிள்ளையவர்கள் நீராடுதல் பூசை செய்தல் சாப்பாடு முதலியவைகளுக்குச் செல்லுஞ் சமயம் பார்த்துத்தான் சாமிநாதையரும் சாப்பாட்டிற்குச் செல்வார்.

ஒரு நாள் காலையில் பாடந்தொடங்குஞ் சமயத்தில் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சாமிநாதையரைப் பார்த்துச், 'சாப்பிட்டு விட்டீரா? இன்னும் சாப்பிடாமலிருந்தால் போய் விரைவாகச் சாப்பிட்டு விட்டு வாரும்' என்று கூறினார். அதற்கு ஐயர், 'செவிக்கு உணவில்லாத போதுதான் வயிற்றுக்குஞ் சிறிது உணவு கொடுக்கவேண்டும். இப்பொழுதுதான் தாங்கள் செவிக்கு உணவளிக்கப் போகிறீர்களே இப்பொழுது ஏன் நான் வயிற்று உணவைப்பற்றிக் கவலைப்பட வேண்டும். அப்புறம் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

> செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கும் ஈயப் படும். 32

செவிக் குணவு—கற்றறிந்தார் கூறும் நன்மொழியாகிய அறிவு. ஈயப்படும்—அளிக்கப் பெறும்.

---

## 33. அறிவுச்செல்வத்தின் அருமை

ஒரு புலவரும் ஒரு செல்வனும் ஒரு மாட்டுவண்டியிலே வேற்றூருக்குப் பயணஞ் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சொந்த ஊருக்கும் அவர் போய்ச் சேரவேண்டிய ஊருக்கும் இடையே ஏறக்

குறைய அறுபது மைல்களிருந்தன வழியிலே வீடு வாசல்கள் அதிகம் இல்லை. வழிமுழுவதும் தீவு போல் இருக்கும்.

ஒருநாள் பயணமுடிவில் இருட்டி விட்டது. வழியில் தங்குவதற்கோ ஊர் காணப் பெறவில்லை. வழியில் இருந்த ஓர் ஊரையும் அவர்கள் தாண்டி விட்டார்கள். வண்டியில், செல்வன் புலவர் வண்டிக் காரன் ஆகியமூவருந்தான் இருந்தார்கள். செல்வனி டத்திலே செலவுக்கு வேண்டிய பணமும் சமையல் செய்து சாப்பிடுவதற்கான பொருள்களும் இருந் தன. புலவரிடமோ அவருடைய அறிவைத்தவிர வே றொரு பொருளும் இல்லை.

வண்டி வழியில் எங்குந் தங்காமற் சென்று கொண்டேயிருந்தது. நடு இரவுங்கடந்து விட்டது. மூவரும் எந்தச் சமயத்தில் கள்ளர்கள் வந்து அடி த்து உதைத்துக் கையிலிருப் பவைகளைப் பிடுங்கிக் கொண்டு போவார்களோ என்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள்எதிர்பார்த்தது நிகழ்ந்து விட்டது. தடிகளுடன் கூடிய கள்ளர் அறுவர் தோன் றிச் செல்வனிடமிருந்த பணத்தையும் மற்றைப் பொருள்களையும் பிடுங்கிக் கொண்டு ஆளுக்கு இரண் டிரண்டு அடிகளுங் கொடுத்து விட்டுச் சென்று விட டார்கள்.

மறுநாள் மூவரும் ஓர் ஊரையடைந்தனர். புல வர் அவ்வூரிலிருந்த ஒரு செல்வனைப் புகழ்ந்து பாடி அவனிடமிருந்து பலவுதவிகளையும் பெற்றுச் செல்வ னுக்கும் வண்டிக் காரனுக்கும் ஆகவேண்டியவைக ளையுஞ் செய்தார். அச்செல்வனுடைய உதவிகொண்டு

போய்ச் சேரவேண்டிய இடத்தைத் துணையுடன் போய்ச் சேர்ந்தார். அறிவுடையவர்கள் எல்லாம் உடையவர்கள்; அறிவில்லாதவர்கள் ஒன்றுமே இல்லாதவர்கள் என்பது அப்புலவர் பாலும் செல்வன் பாலும் அன்று நன்றாக விளங்கியது.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவில்லார்
என்னுடைய ரேனும் இலர். 33

என்னுடைய ரேனும்—எவற்றையுடையவர்களாக விருந்தாலும். இலர்—இல்லாதவர்களாவர்.

---

## 34. மடப்புறம் செந்தமிழ்ச் சங்கம்.

மடப்புறம் என்னும் ஊரிலே இருந்த பலர் ஒன்று கூடிச் சங்கம் ஒன்று தங்கள் ஊரிலே ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்தனர். அந்த ஊரிலே தமிழ் அறிஞர் ஒருவர் இருந்தார். ஆயினும் ஊர்க்காரர்கள் அவரைக் கலந்து ஒன்றும் செய்யவில்லை. அப்பெரியாரைக் கலந்து சங்கம் ஏற்படுத்தினால் அவரையுங் கொண்டுவந்து சங்கத்திலே சேர்க்கும்படியாக விருக்கும். அவருக்குப் பணிந்து அஞ்சி நடக்க வேண்டியதாக இருப்பதுடன் அவருக்கு வேண்டிய உதவிகளையுஞ் செய்யும் படியாக விருக்கும். ஆகையால் அவரைச் சேர்க்காமல் இருப்பது தான் நல்லது என்று முடிவு கட்டினார்கள்.

'மடப்புறம் செந்தமிழ்ச் சங்கம்' என்று ஒரு பலகையில் எழுதி ஊருக்குப்பொதுவாகவும் வீணாகவும் கிடந்த ஒரு கட்டிடத்திலே கட்டித் தொங்கவிட்

டார்கள். அவ்வளவில் சங்கம் ஏற்படுத்தி விட்டதாக மனநிறைவை யடைந்ததுடன் வேலையற்ற வீணர்கள் அச்சங்கத்திலே கூடிச் சீட்டாடுதல் சொக்கட்டானுடுதல் சுருட்டுப் புகைத்தல் முதலிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் சில தமிழ்ப்புலவர்கள் மடப்புறத்திற்கு வந்தார்கள். அவர்கள் அறிக்கைப் பலகையைப் பார்த்து விட்டு, 'அங்கே என்ன நடக்கின்றன' என்று கேட்டார்கள். சங்கத்தை ஏற்படுத்திய சிலர்நடக்கிற காரியங்களைச் சொன்னார்கள். அவர்கள் கூறியவற்றைக் கேட்ட தமிழ்ப்புலவர்கள் நகைத்து, 'இவ்வூரிலே தமிழறிஞர்கள் யாரும் இல்லையா?' என்று கேட்டனர். அதற்கு அவர்கள், 'ஒருவர் இருக்கிறார். அவரைக் கொண்டுவந்து சேர்த்தால் அவருக்கு அஞ்சிப் பணிந்து அவருக்கு வேண்டிய உதவிகளையும் செய்யும் படியாக இருக்கும் ஆகையால் அவரைச் சங்கத்தில் சேர்க்கவில்லை'யென்று பதிலளித்தார்கள்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 34.

அரியவற்றுள்—சிறந்தகாரியங்களுள். பேணி—போற்றி. தமரா—தம்முடையவர்களாகக் கொண்டு.

---

## 35. பெயரை மொழிபெயர்த்தவன்.

சென்னையிலே தண்டபாணி என்னும் பெயருடைய ஓர் இளைஞன் இருந்தான். அவனுக்குத் தனித்தமிழிடத்திலே அளவு கடந்த விருப்பும் வடமொழியினிடத்திலே வெறுப்பும் உண்டாயிற்று. தண்ட

பாணி என்னும் தன்னுடைய பெயரைத் தனித்தமி
ழிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று பலரிட
மும் கூறிவந்தான். தண்டபாணி கூறியதைக் கேட்ட
வர்கள், 'நன்றாக எண்ணிச் செய்ய வேண்டுமென்றும்
திடீரென்று எதையுஞ் செய்துவிடக் கூடாதுஎன்றும்
பிறகு வருந்த நேரிடும் என்றும் அறிவுரை கூறினார்
கள்.

தண்டபாணியோ மற்றவர்கள் கூறியதைச்
சிறிதும் பொருட்படுத்தாமல், தண்ட—தடி, பாணி—
கை; தடிக்கை என்று தன்னுடைய பெயரைமாற்றிக்
கொண்டான். பலரிடமும் அவ்வாறே 'தடிக்கை'
என்று சொல்லிவந்தான். நாளடைவில் பலரும்
தண்டபாணியை, 'தடிக்கையன் என்றும் தடியன்
என்றும், உலக்கையென்றும், உலக்கைக் கொழுந்
தென்றும் சொல்லவும் கூப்பிடவும்தொடங்கிவிட்டார்
கள். அவர்கள் சொல்லியதிலும் கூப்பிட்டதிலும்
இகழ்சிக்குறிப்பும் வெளிப்பட்டது.

நாளடைவில் தண்டபாணிக்குத் தொல்லை அதி
கரித்து வந்தது. அவன் தன்மதிப்பு உடையவனாத
லால் தன்னுடைய நண்பர்களிடம், 'இதற்கு என்ன
செய்யலாம் பழையபடியே பெயரை மாற்றிக்
கொள்ளலாமா?' என்று கேட்டான்.

அவர்கள், 'நாங்கள் முன்னரே நன்றாக எண்ணிச்
செய்யுமாறு கூறினோமே நீ ஏன் கேட்கவில்லை.' ஒரு
காரியத்தை நன்றாக எண்ண மிட்டுச் செய்ய வேண்டு
மென்பதும், செய்த பிற்பாடு எண்ணிக் கொள்வோ
மென்பது இகழ்ச்சியை உண்டாக்கு மென்பதும்

உனக்குத்தெரியாதா?' என்று கூறி இடித்துரைத்தார்கள்.

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 35.

எண்ணி—ஆராய்ந்து. துணிக— முடிவுசெய்க. கருமம்—தொழில். இழுக்கு—குற்றம்.

---

## 36. பெருமையுஞ் சிறுமையும்.

'பெருமையுஞ் சிறுமையும் தான் தரவருமே' என்பது பெரியார் திருவாக்கு. ஓர் ஊரிலே இரண்டு ஆதீனங்கள் (மடங்கள்) இருந்தன. இரண்டிற்கும் இரண்டு துறவிகள் தலைவர்களாக விருந்தார்கள் ஒருவர் நல்லொழுக்கமும் அறச்செயல்களிலேவிருப்பமும் இறைவன் அடிமலரிடத்திலே அன்பும் உடையவர். மற்றவரோ தாம் கொண்ட கோலத்திற்கு ஏற்ப நடப்பவரல்லர். கள்ள ஒழுக்கமும் வீண்பெருமையும் உடையவர்.

இருவருடைய இயல்புகளையும் ஊரினர் நன்குணர்வர். அவர்கள் நல்லொழுக்கமுடையவரைப் புகழ்ந்து பெருமைப் படுத்தி வழிபாடு செய்தும். தீயொழுக்கமுடையவரை இகழ்ந்து சிறுமைப் படுத்தியும் தம்முடைய விருப்பு வெறுப்புக்களை வெளிப் படுத்தியும் வந்தனர்.

ஒரு தினம் பொய்த்துறவு பூண்ட பெரியார் சிலருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அப்பெரியார் அவர்களைப்பார்த்து, 'ஊரினர் தம்முடைய மனம் போனபடி ஒருவரை உயர்த்தியும் ஒருவரைத்

தாழ்த்தியும் பேசுகிருர்கள். அஃது அறிவுடைமை யன்று. எல்லோரையும் ஒரே தன்மையாக மதித்துப் போற்ற வேண்டாமோ?' என்று கேட்டார்.

அவர்களில் ஒருவர் அப்போலிப் பெரியாரைப் பார்த்து, 'ஊரினர் ஒன்றுந் தெரியாத மண்டூகங்கள் என்று எண்ணிவிடாதீர்கள். ஊரினர் எதையும் ஆராய்ச்சி செய்து சீர்தூக்கிப் பார்த்தபிற்பாடே தங்கள்முடிவுகளை வெளிப்படுத்துகிருர்கள். நல்லவர்களை நல்லவர்களாகவும் தீயவர்களைத் தீயவர்களாகவும் தெரிந்துணர்ந்த பிற்பாடே அவர்கள்நல்லவற்றையும் கெட்டவற்றையும் பேசுகிருர்கள்.

ஒவ்வொருவருடைய இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் அவரவர்களுடைய காரியங்கள்தான் நிறைகல்லாக விளங்குகின்றன. ஆகவே சிறுமைக்குள்ளாவோர் தங்களுடைய சிறுதொழிலை விட்டு ஒழுங்குபடுவதைத் தவிரப்பிறரை நோவதில்யாதும் பயனில்லை' என்று கூறினர். பெரியார் தம்முடைய சாயம் வெளுத்து விட்டதென்றுணர்ந்து தம் திருவாயை மூடிக்கொண்டார்.

> பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்
> கருமமே கட்டளைக் கல் 36.

பெருமை—பெருந்தன்மை. ஏனை—பிற. சிறுமை—சிறுதன்மை. கருமம்—காரியம். கட்டளைக்கல்—நிறைகல்; அல்லது உறைகல்.

## 37. அச்சமும் மறதியும்

ஒரு நாள் பாட்டனும் பேரனும் பலசெய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது தாத்தா பேரனைப் பார்த்துத், 'தம்பீ! எச்சமயத்திலும் அச்சத்தையும் மறதியையும் சிறிதாயினும் உடையவனாக விருத்தல் கூடாது. இந்த இரண்டு குணங்களும் மிகத்தீயவை. ஓர் அரசகுமாரன் இளமை தொட்டே எத்தகைய சிறு காரியத்திலும் மிகுந்த அச்சமுடையவனாக இருந்தான். அவனுடைய தந்தை தன்மைந்தன் பெரிய பயந்தாங்கொள்ளியாக இருப்பதைப் பார்த்து அவனுக்கு மிகவும் பாதுகாப்புள்ள ஒரு கோட்டையைக் கட்டி அதிலே இருக்குமாறு செய்தான். அம் மைந்தனோ பெரியவனான பிறகுங்கூட அக்கோட்டைக்குள் அஞ்சிக்கொண்டேயிருந்தான். பாதுகாப்பு மிகுந்த கோட்டை கூட அவன் அச்சத்தைப் போக்கவில்லை. அச்சமுடையவர்கட்கு எப்படிப் பாதுகாப்புப் பயன்படாததாக விருக்கிறதோ அவ்வாறு மறதியுடையவர்களுக்கு எந்த விதமான நன்மையுமே உண்டாக மாட்டாது.

நான் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது என்னோடு மாணிக்கம் என்றொரு பையன் படித்துக்கொண் டிருந்தான். அவனுக்கு மறதி மிகவும் அதிகம். அதனால் நாங்களெல்லோரும் அவனை 'மறதி மாணிக்கம்' என்றே கூப்பிடுவது வழக்கம். கூறியசெய்தியை ஒரு கணத்துக்குள் மறந்து விடுவான். ஒரு முறை பள்ளிக்கூட விடுமுறைநாள் ஒன்றில் பையன்களுக்குப் பலவகைப் புத்தகங்களைப் பரிசளிப்பதாக ஒரு செல்வர் கூறியிருந்தார். பையன்

கள் எல்லோரும் சென்றிருந்தோம். புத்தகங்கள் எழுதுகோல்கள் தின்பண்டங்கள் முதலியன எல்லோருக்கும் பரிசளிக்கப்பெற்றன. எல்லோரும் பெற்று மகிழ்ந்தோம்.

வழக்கம்போல் மறதிமாணிக்கம் இச்செய்தியையும் மறந்துவிட்டபடியால் பாடசாலைக்கு வரவில்லை. மறுநாள் பையன்களைப் பார்த்தபோது அவர்கள் பெற்றுள்ள பரிசுகளைப் பார்த்து வருந்தினான்.

**அச்சம் உடையார்க்(கு) அரணில்லை ஆங்கில்லை**
**பொச்சாப்(பு) உடையார்க்கு நன்கு. 37.**

அச்சம் — நடுக்கம். அரண் — பாதுகாப்பான இடம். ஆங்கு—அவ்வாறு. பொச்சாப்பு—மறதி. நன்கு—நன்மை.

---

## 38. காளையப்பனும் செல்வனும்

ஓர் ஊரிலே காளையப்பன் என்று பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த ஊக்கமுடையவன். அவனுக்கு நிலபலமோ கைப்பொருளோ யாதும் இல்லை. மிகுந்த சுறு சுறுப்புடையவனுதலால் தன் குடும்பத்திற்கு வேண்டியவைகளை விரைந்து தேடி விடுவான். எப்பொழுதும் உழைப்பும் ஊக்கமும் உடையவனுதலால் அவன் உடல் நோய் முதலிய உடற்கேடு அற்று உறுதியுடன் விளங்கியது.

அதே ஊரில் முருகப்பன் என்றொரு செல்வன் இருந்தான். அவனுக்கு அவனுடைய முன்னோர்களால் தேடப் பெற்ற நிலபலம் முதலிய பொருள்கள்

நிறைய விருந்தல. ஆனால் முருகப்பன் ஒருகாசுகூடத் தேடியவனல்லன். தாராளமாகச் செலவுமட்டுஞ் செய்து கொண்டிருந்தான். குடும்பமும் பெருகிக் கொண்டுவந்தது. குந்தித் தின்றால் குன்றுங் குறையு மல்லவா? நாளடைவில் முருகப்பனுடைய நிலைமை வறுமையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. காளையப்பனோ சிறிது சிறிது மீதிபிடித்த பொருளால் செல்வனாகிக் கொண்டிருந்தான். காளையப்பனுடைய விடாமுயற்சியும் ஊக்கமும் அவனை விரைவிற் செல் வனாக்கிவிட்டது.

முருகப்பனோ இரங்கக்கூடிய நிலைமையை யெய் திவிட்டான். அவன் தன்னுடைய பொருளைப் பெரி தாக நம்பியிருந்தது இறுதியில் பெரிய ஏமாற்றத் தைத் தந்து விட்டது. அவன் நாளடைவில் மேல் பிடிக்கும் வேலைக்காரர்கள் கால்பிடிக்கும் வேலைக் காரர்கள் வெளிவேலைக்காரர்கள் வயல் வேலைக்காரர் கள் முதலிய எல்லோரையும் ஒவ்வொருவராக நீக்கி விட்டு எல்லாக்காரியங்களையுந் தானுந்தன் மக்களு மாகவே செய்து கொள்ளத் தொடங்கினான்.

உடையர் எனப்படுவ(து) ஊக்கமஃ தில்லார்
உடைய(து) உடையரோ மற்று. 38

உடையர்—செல்வமுடையவர். ஊக்கம்—காரிய முயற்சி.

---

## 39. புத்தகங்கள் எழுதிய புலவர்

மதுரைமாநகரிலே முன்னாளில் ஒரு புலவர் இருந் தார். அவர்மிகவும் பெரியபுலவர். வீட்டை விட்டு

வெளியே கூடப் புறப்பட்டுச் செல்லமாட்டார். உட்கார்ந்தபடியே இராப்பகல் எந்தநேரத்திலும் நூல்கள் எழுதுவதே வேலையாக இருந்தார். அவர் எழுதிய நூல்களெல்லாம் அருமையும் பெருமையும் அமைந்த வகைகளாக இருந்தன. சிலர் அவருடைய நூல்களை வாங்கிப் படித்துப் பார்த்தார்கள். மிகவும் நன்றாக இருந்தன. புலவருடைய நூல்கள் நன்றாக இருப்பதாகப் பலரிடமுந் தெரிவித்தார்கள்.

புலவருடைய நூலுக்கு மிகுந்த மதிப்பும் செலவும் ஏற்பட்டன. புலவருடைய வீடு தேடிப் பலரும் பொருளைக் கொணர்ந்து கொடுத்து அவருடைய அரிய நூல்களைப் பெற்றுச் சென்றனர். புலவர் சின்னாளில் பெருஞ்செல்வராக மாறிவிட்டார்.

ஒரு நாள் புலவரைக் காணச் சென்ற சிலர் அவரைப் பார்த்து, 'என்ன நீங்கள் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டிருக்கிறீர்கள் அவ்வாறிருந்தும் பெருஞ்செல்வராக ஆகிவிட்டீர்களென்று எங்கும் பேச்சாக இருக்கின்றதே' என்று கேட்டார்கள். அதற்குப்புலவர், 'திருவள்ளுவ நாயனாருடைய திருக்குறளை நீங்கள் படித்ததில்லையா? அப்பெரியார் தம்முடைய திருக்குறளிலே, "அசைவில்லாமல் எப்பொழுதும் ஒரே ஊக்கமாக முயற்சிசெய்கின்றவனுடைய இடத்திற்குச், செல்வமானது வழிகேட்டுக் கொண்டு செல்லும்" என்று கூறியிருக்கிறார். நான் ஒரே ஊக்கமாக என்னுடைய வேலையில் ஈடுபட்டேன். என்னுடைய நூலின் பெருமையை உணர்ந்தவர்கள் என்னுடைய இருப்பிடந் தெரியாதிருப்பினும் வழிகேட்டுக் கொண்டு வந்து செல்வத்தைக் குவித்து நூல்களைப்

பெற்றுக் கொண்டு செல்கிறார்கள். முயற்சியுடையவர் செல்வத்தை யடைவதில் என்ன புதுமை யிருக்கிறது.? முயற்சியுடைமை யோடுகூடியிருந்தும் வறுமை நிலைமையிலேயேயிருந்தால் அதுதான் வியப்படையக் கூடியதாகும்' என்று விடையளித்தார்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. (39)

ஆக்கம்—செல்வம். அதர்—வழி. வினாய்—கேட்டு செல்லும்—சென்றுசேரும். உழை—இடம்.

## 40. நாடிழந்த மன்னன்

முன் காலத்திலே தென்னாட்டில் இரண்டு அரசர்கள் அரசாட்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஓர் அரசன் மிகுந்த முயற்சியுடையவன். எப்பொழுதும் அவன் படைதிரட்டுவதினும் நாடு பிடிப்பதினுமே கண்ணுங்கருத்துமாக இருப்பான். அதனால் பல நாடுகள் அவனுடைய ஆட்சிக்குள் ளாயின.

மற்றோர் அரசனோ பெரிய சோம்பேறி. அரசாட்சிக் காரியத்தைக் கூடப்பாராமல் அதனை அமைச்சர்களிடம் ஒப்படைத்து விட்டு இன்பவாழ்விலே ஈடுபட்டிருந்தான். பொருளை அமைச்சர்கள் நன்கு சேர்க்காமல் பல வழியிலும் வீண் செலவு செய்து அரசாங்கச் செல்வ நிலைமையை மிகவும் கவலைதரும் படியாகச் செய்து விட்டார்கள். பொருள் நிலைமை நன்றாகவில்லாவிட்டால் படைதிரட்டிப் பாதுகாப்பது இயலா

தல்லவா? இந்நிலைமை இவனுடைய பகையரசர் களுக்கு நன்குதெரிந்தது.

நாடு பிடிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தமுற் கூறியமன்னன் சோம்பேறி யரசன்மேல் படையெடுத்து நாட்டை மிக எளிதாகப் பிடித்துக் கொண்டான்.

அமைச்சர்களோ அம்மன்னனுக்கு அடிமையாகி அவனுடைய ஏவலின் படியே ஒழுகத் தொடங்கினார்கள், இன்பவாழ்வில் ஈடுபட்டிருந்த அரசன், தன்னைப் பிடித்துச் சிறையிலடைத்துத் துன்புறத்தக் கூடும் என்னும் அச்சத்தால்; நாடு வீடு உற்றார் உறவினர் எல்லாவற்றையும் விட்டு விட்டு இரவோடிரவாக நாட்டை விட்டு ஓடிப் போனான்.

ஓடிக்கொண்டிருந்த வழியில் தன்னிடம் பலமுறை வந்து பரிசு பெற்றுச் சென்ற ஒரு புலவரைக் கண்டான், அப்புலவர் அரசனுடைய நிலைமை தெரிந்து மிகவும் வருந்தினார். அவர் முன் பலமுறை அரசனுக்கு அறிவுரை கூறியவர். அவர் அப்போது அரசனைப் பார்த்து, 'ஓ அரச! முயற்சியுடைமைதான் செல்வத்தை மேன் மேலும் வளர்க்கும். முயற்சியில்லாத் தன்மை வறுமையைக் கொண்டுவந்து சேர்த்து விடும்' என்று நான் உனக்கு எத்தனையோமுறை கூறியும் கேட்காமற் போனையே அதன் பலன் இப்பொழுது தெரிகிறதா' என்று இடித்துரைத்து அவன் மீண்டும் நாட்டைக் கைப்பற்றற்கான வழியையுங் கூறினார்.

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 40

திருவினை—செல்வத்தை, முயற்றின்மை—முயற்சியின்மை, இன்மை—வறுமை, புகுத்திவிடும்—உண்டாக்கும்.

---

## 41. அருஞ்செயல்மிக்க அமைச்சன்

ஓர் அரசனுக்கு நல்ல அமைச்சன்ஒருவன் அமைந்திருந்தான். அவன் அமைச்சர்க்குரிய ஆற்றல்களெல்லாம் நன்கு அமையப் பெற்றவன். எச்செய்தியையும் கேட்பவருள்ளத்தில் நன்கு பதியுமாறு சொல்லக் கூடிய சொல்லாற்றல் மிக்கவன். எக்காரியத்தையுந் தொடங்கி விட்டால் நிறை வேற்றுமல் விடமாட்டான். எதற்குஞ் சிறிதும் அஞ்சவுமாட்டான். அந்த அமைச்சனுடைய பெயரைக் கேட்டாலே பகைவர் களுக்கு மிகுந்த நடுக்கம் ஏற்படும். அந்த அமைச்சனைப் பெற்றிருந்த படியால் அரசன் யாதொரு கவலையுமின்றி இனிது மகிழ்ந்திருந்தான்.

இந்த அரசனுடைய பகையைத் தேடிக் கொள்ளாமல் பிற அரசர்கள், மிகவும் பணிவுடனும் நட்புடனும் நடந்து கொண்டு வந்தார்கள். நெடுந்தொலை நாட்டினனாகிய ஓரரசனுக்கு அந்த அமைச்சனுடைய செய்தி நன்றாகத் தெரியாது. அவன் நாடு பிடிக்க வேண்டு மென்னும் ஒரே நோக்கத்துடன் தன்னுடைய படையைத் திரட்டிக் கொண்டு வந்தான்.

இருபடைகளுக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. தூரத்திலிருந்து வந்தெதிர்த்த அரசனுடைய படை மிகப் பெரியதாக விருப்பினும் எதிரியினுடைய நிலத்திலே வந்து சேர்ந்தமையின் போதிய

உதவி கிடைக்காமல் திண்டாடிற்று. இந்த அறிவு மிக்க அமைச்சனுடைய சூழ்ச்சித்திறத்தால் அப் படைகள் மிக எளிதில் தோற்கடிக்கப் பெற்று ஓடின. அந்தப்படைகள் மிகவும் பெரிதாக வந்த மையின் அழிவும் பெரிதாகவே ஏற்பட்டது.

ஓடும்போதே அந்த அரசன், இவனுடைய படை மிகவும் சிறிதாக விருந்தும் நம்மைப் புறமுதுகு காட்டச் செய்து விட்டானே இதற்குக் காரணம் யா தென்று சிலரைக் கேட்டான், அருகிலிருந்தவர்கள், 'அந்த அரசனிடம் அறிவுமிக்க அமைச்சன் ஒருவனி ருக்கிறான், அவன், "சொல்வன்மையும் சோர்வில்லா மையும், அச்சமின்மையும்" உடையவன். அவனால் தான் நமக்குத் தோல்வி ஏற்பட்டது.' என்று கூறி னார்கள்,

**சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல் வெல்லல் யார்க்கும் அரிது.** **41**

சொலல் வல்லன்—சொல்லுதலில் வல்லவன், சோர்வு—தளர்ச்சி. இகல்—பகை.

---

## 42. கள்ளத்தைக் காட்டிய முகம்

சென்னையிலே உள்ள ஒருபெரிய காரியாலயத்தில் ஒரு நாள் ஒரு களவு நடந்து விட்டது. அஃதாவது காரியாலயத்தின் தலைமையதிகாரி (மானேசர்) தம் முடைய பலகையின் மீது ஐந்நூறு வெண் பொற் காசுகள் மதிப்புள்ள பணத்தாளை (ரூபா நோட்டுக் களை) வைத்து விட்டு ஏதோ அலுவலாகவேறோரி

டத்திற்குச் சென்று விட்டுச் சிறிதுநேரத்தில் திரும்பினார். தம்முடைய காரியாலயத்தில் வேலைபார்ப்பவர்களனைவரும் சத்திய அரிச்சந்திரனுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்களென்று அவர் எண்ணிக்கொண்டிருந்தபடியால், அவ்வாறு எளிதில் களவு போகுமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

களவு நடந்த செய்தி காரியாலயம் முழுவதற்கும் விரைவில் பரவிற்று. தலைமையதிகாரி காரியாலயத்தில் அலுவல்பார்க்கும் அனைவரையும் அழைத்து ஒன்று சேர்த்தார். எல்லோரையும் கேள்விகேட்டார். ஒவ்வொருவருடைய முகத்தையும் உற்றுப்பார்த்து ஆழ்ந்து கவனித்தார். ஒரு கணக்கப்பிள்ளை (கிளார்க்) யின் முகம் வழக்கத்திற்கு மாறாக மிகவும் வேறுபட்டிருந்தது அவரைப்பல கேள்விகளைக் கேட்டார் அவருடைய மொழிகளும் குழறுபடையாகவும் வழவழா வென்றும் இருந்தன. அவர் பேந்தப் பேந்த விழிப்பதைப் பார்த்து எல்லோரும் அவர்மீது ஐயங் கொண்டனர். அவரை யழைத்துக் கொண்டு சென்று அவருடைய எதிரிலுள்ள எழுத்துப்பலகைப் பெட்டியை ஆராய்ச்சி செய்தனர் களவு போன காசுத்தாள்கத்தை ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டிருந்தது.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 42

(அடுத்தது—தனக்கருகில் உள்ளதை. பளிங்கு—பளிங்குக்கல். கடுத்தது—மிகுதிப்பட்டதை.

## 43. சிறுவருக்குமுன் சொற்பொழிவு

ஓர் ஊரிலே ஓர் அறிஞர் இருந்தார். சொற்பொழிவு செய்வதே அவருடைய தொழில். அவருடைய சொற்பொழிவுகள் அருமையும் பெருமையும் அமைந்தனவாக இருக்கும். ஆயினும் அவர் எப்பொழுதுஞ் சொற்பொழிவு செய்வதே தொழிலாக இருந்தபடியால் அவருடைய சொற்பொழிவு பலருக்கும் புளித்துப்போய் விட்டது. ஆயினும் புலவர் தம்முடைய சொற்பொழிவு வேலையை விடாமற் செய்து கொண்டேயிருந்தார். கேட்பதற்குயாரும் இல்லாவிட்டால் சிறு குழந்தைகளையாவது சேர்த்துவைத்துக் கொண்டு தம்முடைய சொற்பொழிவை நடத்துவர்.

ஒருநாள் புலவர் ஊர்க்குழந்தைகள் பலரைச் சேர்த்துவைத்துக்கொண்டு அன்பு என்னும் செய்தியைப்பற்றி விரிவாகச் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார். அப்போது சிலர் அறிஞரைப் பார்த்துப், 'பெரியீர்! இந்தச்சிறு குழந்தைகளைச் சேர்த்துவைத்துக் கொண்டு சொற்பொழிவு செய்கிறீர்களே அதனால் என்ன பயன் ஏற்படும்?' என்று கேட்டார்கள். புலவர் அம்மக்களைப் பார்த்து, அப்படிச் சொல்லிவிடாதீர்கள். நான் சொல்லுகிற செய்திகள்வளரும் அறிவுடைய இப்பிள்ளைகளுக்கு எவ்வாறு பயன் படுமென்னில், பாத்தியின் கண் வளர்ந்து கொண்டிருக்கும் பயிர்களுக்கு நீர்விட்டாற் போலாகும் தெய்வப்புலவராகிய திருவள்ளுவர், "தாமே உணருந் திறமையுடையவர் முன் ஒருவர்

ஒன்றனைச் சொல்லி அறிவுறுத்த முயலுதல் வளரும் பயிருள்ள பாத்தியின் கண் தண்ணீரை ஊற்றினாற் போன்றதாம்' என்று கூறியிருத்தலை நீங்கள் உணரமாட்டீர்களா?' என்று கேட்டார். அறிஞரின் மொழியைக்கேட்டோர் அவர் கூறியது தகும். சிறு வர் முன் சொற்பொழிவு செய்வது சிறுவர்களுக்கு நன்மையைத்தரும் என்றுணர்ந்து சென்றனர்.

> உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
> பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 43

உணர்வது—அறிவு. பாத்தி—பகுக்கப் பெற்ற நிலம். சொரிந்தற்று—ஊற்றினாற்போலும்

---

## 44. புதிய நகரம்

ஓர் அரசனுடைய நாட்டில் மக்கட் பெருக்கம் மிகுதியாகி விட்டது. அவன்புதித க வேறொரு நாட்டை அமைத்தான். அந்நாட்டின் அமைப்புத் தக்கபடியாக அமையவில்லை. தகுந்த விளைநிலங் களின்மையால்மக்களைப் பசிப்பிணி வருத்தியது. அந் நாடு காட்டிலே ஏற்படுத்தப் பெற்றபடியால் மலைக் கள்ளர்களின் தொல்லையும் மிகுதியாக இருந்தது. மக்கள் பல வகையான அல்லல்களை அனுபவித்தார் கள். ஒரு பெரியவர் அரசனிடஞ் சென்று, 'ஓ அரச! புதிய நகரமானது நன்றாக அமையவில்லை. நகருக்கு நாடுகள் மிகுதியாக இருத்தல் வேண்டும் அவ்வாறில் லாமல் காடுகளே மிகுதியாக இருக்கிற நாடு எவ் வாறு சிறப்படையும்? நாடென்றால் கடுமையானபசி

நோயும், மற்றைப் பிணிகளும், வருத்தும் பகைவர் கூட்டமும் இல்லாமல் சிறந்து திகழ்வதல்லவோ நாடு. இவ்வாறு பலவகைத் தொல்லைகளும் நிறைந்தது நாடாகுமா?' என்று கேட்டார். அரசன் அப்பெரியவர் கூறியது உண்மையான மொழியே என்றுணர்ந்து, நாட்டைத் திருத்தி நல்ல முறையிலே அமைத்தான். மக்களுந் தொல்லையற்று நல மடைந்தார்கள்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு. 44

உறுபசி—மிகுந்தபசி, ஓவாப்பிணி—ஒழியா நோய், செறுபகை - வருத்துகின்றபகை.

---

## 45. வேல் பிடுங்கிய வீரன்

ஒருவீரன் பெரும் போர்க்களத்திலே கடுமையான போர் செய்தான். அவனுடைய கையிலிருந்த வேல், கணை முதலிய கூரிய கருவிகளெல்லாம் பகைவர்கள் மீது செலுத்தித் தீர்ந்து போனபடியால் வெறுங்கையனாக வீட்டை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தான். வீட்டிலிருந்து வேறு படைக்கலங்களை எடுத்துச் செல்வதற்காகவே அவன் திரும்பி வந்துகொண்டிருந்தான்.

அந்த வீரன் வெறுங்கையனாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்ததைக் கண்டு, அவனுடைய பகைவனானவன் தன்னுடைய யானையை அந்தவீரன் மேலே ஏவினான். அந்தயானையைக் கண்டவீரன்

அதன்மீது செலுத்துவதற்குப் படைக்கலம் ஒன்று மில்லையே என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒன்றுங் கிடைக்கவில்லை. அவனுடைய பகைவனால் அவன்மீது வீசப்பட்ட சிறியவேல் ஒன்று அவனுடையமார்பிலே தைத்திருந்தது, அவனுடைய பார்வைக்குத் தட்டியது. அவ்வளவில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தவனாய் அந்தவேலைப் பிடுங்கிக்கொண்டு அந்தயானையை எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினான்.

அவன்மீது யானையைச் செலுத்திய அவனுடைய பகைவனானவன், அவ்வீரன் மார்பு வேலைப்பிடுங்கிக் கொண்டு யானையை யெதிர்த்ததைக் கண்டதும், தப்பாமல் இந்தயானையையுங் கொன்றுவிடுவான் என்று அறிந்தவுடன்; அந்த வீரனுடைய தீரத்தைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து பேசலானான்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியாநகும். 45

களிறு—ஆண்யானை. பறியா—பிடுங்கிக்கொண்டு. நகும்—மகிழ்வான்.

---

## 46. நல்லியல்பு வாய்ந்த நண்பர்கள்

ஓர் ஊரிலே தாமன் என்றும் சோமன் என்றும் பெயருடைய இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். எப்பொழுது பார்த்தாலும் இருவரையும் ஒன்றாகவே காணலாம். நன்மை தீமை யாருக்கேற்படினும் இருவரும் பங்கிட்டே அனுபவிப்பார்கள். தாமன் வருந்துவதைப் பார்த்துச் சோமன் பொறுக்கமாட்டான்.

சோமன் வருந்துவதைப் பார்த்துத் தாமன் பொறுக்க மாட்டான்.

ஒரு நாள் மாலையில் சோமனுந் தாமனும் ஊருக்குப் புறம்பே உலாவிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது ஒரு பெரிய கருவேல முள்ளானது சோமனுடைய காலிலே குத்தி ஓரங்குலம் பாய்ந்து விட்டது. அதைக்கண்ட தாமன், 'ஐயோ' என்று அலறிவிட்டான். அப்படியே சோமனை உட்கார வைத்து அந்த முள்ளை அசையாமல், 'வெடுக்' கென்று பிடுங்கினான். அவ்வளவில் குருதி பீறிக்கொண்டு வெளிவந்தது. அதைக்கண்ட சோமன் கூட வருந்தவில்லை. தன்னுடைய நண்பனுக்கு ஏற்பட்ட அத்துன்பத்திற்காகத் தாமன் கண்ணீர் விட்டு வருந்தினான். கண்ணீர் என்றால் நீலிக்கண்ணீர் அல்ல, உண்மையான வருத்தத்தினால் ஏற்பட்ட துன்பக்கண்ணீர். அன்று அந்நண்பர்கள் இருவரையும் பார்த்தவர்கள், நண்பர்கள் என்றால் இப்படியல்லவோ இருக்கவேண்டும். 'வேட்டி அவிழப் பெற்றவனுடைய, கை, அவ்வேட்டியை விரைந்து பிடித்துக் கொள்வதைப் போலத்தன் நண்பனுக்கு ஒரு துன்பம் வந்தபொழுது அதனை விரைந்து நீக்கமுற்படுவதல்லவோ நட்பு' என்று கூறி இருவருடைய நட்டையும் வியந்து கொண்டாடினார்கள்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 46

உடுக்கை—வேட்டி; இழந்தவன்—அவிழப் பெற்றவன். இடுக்கண்—துன்பம். களைவது—நீக்குவது.

## 47. பிறர்க்கு அறிவு புகட்டிய பெரியார்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் பல அறிவு நூல்களைக் கற்றவர். ஊரார்களுக்கெல்லாம் அறிவுரையும் அறவுரையும் வழங்குவதே அவருடைய தொழில் அவருடைய உரைகளெல்லாம் ஊரார்களுக்கே தவிர அவருக்காக ஒன்றுமில்லை. பிறருக்கு அறிவுறுத்துகிறபடி தாம்மட்டும் நடக்கமாட்டார். ஆனால் தாம் சொல்லுகிறபடி மற்றவர்கள் நடக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுவார்.

ஒரு முறை இருவர் தம்முள் மாறுபட்டுக் கலகம் விளைத்து ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசிக்கொண்ட போது பெரியார் அங்கு சென்று இருவரையும் பொறுமையுடன் இருக்குமாறு கூறி, 'பொறுமை கடலினும் பெரிது' என்று அறவுரையுங் கூறினார். மற்றொருநாள் அப்பெரியாருக்கும் மற்றொருவருக்கும் பகை மூண்டது. அப்பொழுது பெரியார், 'பொறுமை கடலினும் பெரிது' என்பதை மறந்து விட்டுத் தம்முடைய எதிரியைப் பல இழிசொற்களால் இகழ்ந்துரைத்தார். அவருடைய அறிவின்மையைக் கண்ட சிலர், 'நூல்களைப் படித்தறிந்தும், பிறர்க்கு அறமுரைத்தும் தாம் மட்டும் அடங்காத அறிவில்லாதவர்களைப் பார்க்கினும் அறிவில்லாதவர்கள் இவ்வுலகத்திலே எவரும் இலர்' என்று எள்ளி நகையாடினார்கள்.

பெரியவர் தம்முடைய மடமையினால், இவ்வாறு தாமே தமக்கு இழிவைத் தேடிப் பலராலும் பழித்துரைக்கப் பட்டார்.

**ஓதி யுணர்ந்தும், பிறர்க்குரைத்தும் தானடங்காப்,**
**பேதையிற் பேதையார் இல்.** **47**

ஓதி உணர்ந்தும்—நூல்களைப் படித்தறிந்தும்.
பிறர்க்குரைத்தும்—பிறருக்கு அறிவுபுகட்டியும்.
பேதையில்—அறிவில்லாதவர்களைப் பார்க்கினும்.

---

## 48. அரிய மருந்து

தொண்ணூற்றொன்பது வயது சென்ற தொண்டு கிழவர் ஒருவர் சென்னையில் இருந்தார். அவர் பார்வைக்கு அறுபது வயதுகூட ஆகாதவர் போல உழைப்பும் ஊக்கமும் இளமையும் உடையவராக விளங்கினார். அப்பெருங் கிழவரைச் சிலர் பார்த்துப், 'பெரியீர்! தாங்கள் இளமையொடும் வளமையொடும் இருப்பதற்கு யாது மருந்து சாப்பிடுகிறீர்கள்? அதனையெங்கட்குஞ் சொன்னால் நாங்களும் அம்மருந்தையுண்டு தங்களைப் போல நல்லுடல் பெற்று விளங்குவோமே' என்று கேட்டார்கள்.

அதற்கு அப்பெரியார், 'நான் இதுவரையினும் எம்மருந்தையும் உண்டறியேன். மருந்துகளைக் கண்டபடி உண்பதனால் தான் உடலானது கெட்டுப் போகிறது. "நாம் உண்ட உணவானது நன்கு செரித்துப் போய்விட்டதா என்பதை நன்காராய்ந்து, பசியானது எழுந்தபின் சாப்பிடுவோமானால் இந்த உடலுக்கு மருந்து என்று ஒன்று வேண்டியதே இல்லை" பெரியோர்களும் இவ்வாறு தான் கூறியிருக்கிறார்கள். நான் இவ்வாறு பசித்த பிறகு சாப்பிடும் வழக்கத்தை மேற்கொண்டிருப்பதனால்தான் இவ்வாறு சீரான உடலோடு இருக்கிறேன்' என்று பதிலளித்தார்.

பெரியாருடைய பதிலைக் கேட்டோர், நன்மருந்து பசித்தபின் உண்டலே என்பதைத் தாமும் உணர்ந்து அவ்வழக்கத்தை மேற்கொள்ளலாயினர்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்தியது
அற்றது போற்றி உணின். 48

மருந்து—நோய் நீக்கும் பொருள்; இறவாமையைத் தருவது, யாக்கை—உடல், அற்றது—செரித்ததை.

---

## 49. குடிப்பிறந்தார் குணம்

இரண்டு செல்வர்களுக்குள் ஒரு முறை பெரும் போர் மூண்டுவிட்டது. இருவரும் நீதி மன்றத்தில் சென்று பெரும் பொருள் செலவிட்டு வழக்காடலாயினர். ஒருவருடைய பக்கத்திலேதான் நேர்மை யிருந்தது. மற்றொருவர் பக்கம் ஒழுங்கற்ற முறையில் வீண் வாதத்தையும் பொய்மையையும் பற்றுக் கோடாகக் கொண்டிருந்தது. முதலில் நீதி மன்றத்தில் வழக்காடுவதற்குச் சென்றவரும் பொய்ம்மையாளர் தாம். அவர் தம்முடைய பக்கத்திற்கு ஆக்கந் தேடுவதற்காகப் பொருள் கொடுத்துப் பொய்க்கரி கூறுவோரைத் திரட்டினர்.

அவ்வூரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் நல்ல குடியிலே பிறந்தவர். பல நூல்களைப்படித்த அறிஞர். அவருடைய பேச்சுக்கு மிகவும் மதிப்புண்டு. நீதிமன்றத்திலே அவர் கூறுவதை நீதித்தலைவர்

கள் ஐயப்படாமல் ஒத்துக் கொள்வார்கள். பொய் வழக்காடிய முதல் வழக்காளி அவரை எவ்வாறு யினும் தம் பக்கத்துச் சாட்சிக்காரராகச் சேர்த்து விடவேண்டுமென்று மிக முயற்சி செய்தார். தம்பக் கத்திற்கு உதவியாகச் சாட்சி கூறின், ஆயிரம் ரூபாய் கள் இனமளிப்பதாகவும் கூறினர். அப்பெரிய வரோ ஆயிரமல்ல பதினயிரம் கொடுத்தாலும் பொய்க்கரிமட்டும் புகல முடியாதென்று உறுதியாகக் கூறிவிட்டார். 'அடுக்கப்பெற்ற கோடிக்கணக்கான பொருள்களைப் பெற்ருலும் நல்ல குடியிலே பிறந்த வர்கள் தங்களுடைய குடிப் பிறப்புக்கு இழிவான காரியங்களைச் செய்யமாட்டார்கள்' என்பது அப் பெரியவரிடம் நன்கு விளங்கியது.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் 49

குடிப்பிறந்தார்—நல்ல குடியில் பிறந்தவர்கள். குன்றுவ—பெருமை குறையும் படியான காரியங்கள்.

## 50. உழுதுண்டு வாழ்தலின் உயர்வு

சென்னை நகரிலிருந்து ஒருசிறுவனும் அவனு டைய தங்கையும் பக்கத்திலுள்ள சிற்றூர்க்காட்சி களைக் காண்பதற்காகச் சென்றூர்கள். அங்கு வயல் களில் பல உழவர்கள் உழுதொழில் செய்து கொண் டிருந்தார்கள். அந்த உழுதொழில் வேலை சிறுவ னுக்கு மிகவும் இழிவாகத் தெரிந்தது. உழுதொழி லாளர்களையும் அவர்களுடைய தொழிலையும் பற்றி

மிகவும் இழிவாகப் பேசினான். அந்த மனிதர்கள் மாட்டோடு மாடாக இருக்கிறார்களே தவிர மனிதர்களாக 'இல்லை' என்றான். வேறுபல மொழிகளும் பேசினான்.

மகன், உழவுத்தொழிலை இழிவாகப் பேசியது தந்தைக்குப் பிடிக்கவில்லை. அவர் தம்முடைய மகனைப் பார்த்துத் தம்பீ! உழுதல் தொழிலை இழிவாகப் பேசாதே. நாமெல்லாம் உழுதொழிலால்தான் உயிரோடு இருக்கிறோம். நாம் பட்டினத்தில் செய்யும் பெரிய உத்தியோக வேலைகளெல்லாம் இன்னொருவரிடம் கைகட்டி நின்று அச்சத்துடன் செய்வது. நம்மை அதிகாரிகள் வேலையை விட்டுத் தள்ள விட்டால் மிகவுந் தொல்லைப்படும் படியாக இருக்கும். இவர்களுடைய தொழில் அப்படியல்ல. நம்முடைய தொழில் தான் மிகவும் இழிவானது. "உழுதுண்டு வாழ்பவர்கள்தாம் சிறப்பான வாழ்க்கையுடையவர்கள். மற்றவர்கள் பிறரைத் தொழுது கொண்டு அவர்களுக்குப் பின்னாலே திரிகிறவர்கள் இதை நீ நன்றாகத் தெரிந்துகொள். இனிமேல் உழவுத் தொழிலை இழிவாகப் பேசாதே' என்று அறிவுகட்டினார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர். ஃ

உழுதுண்டு—உழவுத் தொழில் செய்து உண்டு, வாழ்வார்—சிறப்பாக வாழ்பவர்.

Printed at Rayan Press, Madras-1.

43491